உ

சிவமயம்.

# இலக்கண சந்திரிகை.

இஃது

ஊர்காவற்றுறைக்கோட்டு

நீதிபதி

## மாந். கு. கதிரைவேற்பிள்ளையவர்கள்

அநுமதிப்படி

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம்

## அ. குமாரசுவாமிப்பிள்ளையால்

இயற்றிக்

கொக்குவில்

சோதிடப்பிரகாசயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

---

விளம்பி௵ ஆனி௴.

24579

# முகவசனம்.

சம்ஸ்கிருதபாடையிலிருந்து தற்சமமாய் இயல்பாயும், தற்பவமாய் விகாரமாயும் வந்து தமிழ்ப்பாடையில் வழங்குஞ் சொற்கள் பல்லாயிரமுள. தற்பவமாய் வருஞ் சொற்களுக்கு நன்னூலார் பதவியலிற் சில சூத்திரங்களைக்கொண்டு கற்பித்த விதிகளுள் அமையாத திரிபுமுதலிய விகாரங்கள் பலவுள என்று பாரதம், இராமாயணம் முதலிய இதிகாசங்களையும், கூர்மபுராணம், கந்தபுராணம் முதலிய புராணங்களையும், சிவஞானசித்தியார் முதலிய சைவசித்தாந்த நூல்களையும், வேதாந்தசூடாமணி முதலிய வேதாந்த நூல்களையும், பிரயோகவிவேகம் முதலிய இலக்கண நூல்களையும், குமாரசாமீயம் முதலிய சோதிட நூல்களையும், தன்வந்திரீயம் முதலிய வைத்திய நூல்களையும், இன்னும் பல காவியங்களையும் படிக்கும்போது அறிகிறோம்.

இப்படிப்பட்ட விகாரங்களுக்கு, இலக்கியங் கண்டதற்கு இலக்கணமியம்பல் தகுதியாதலின், விதிகள் கற்பித்து இலக்கணங் கூறுவது ஆவசியகம் என்று கண்டு, சம்ஸ்கிருதத்திலும், தமிழிலும் மிகுந்த ஆராய்ச்சியுடையராகிய சுன்னாகம் ஸ்ரீ. அ. குமாரசுவாமிப்பிள்ளைக்கு எனது அபிப்பிராயத்தைத் தெரிவிக்க, அவர் எனது அநுமதிப்படி வடசொல்வேறுபாட்டு விதிகளை எழுதி அவற்றோடு மாணாக்கர்க்கு உபயோகமாகும் எழுத்தொருப்பாடு, உபசருக்கக்கூறுபாடு, இடைச்சொற்கூறுபாடு, தத்திதாந்தப் பாகுபாடு, பெயர்ச்சொற் பாகுபாடு, வினைச்சொற்பாகுபாடு, உரிச்சொற்பாகுபாடு முதலியவைகளையுஞ் சேர்த்து "இலக்கணசந்திரிகை" எனப் பெயரிட்டு இப்புத்தகத்தை எழுதினார்.

இப்புத்தகம் வித்தியாசாலைகளிலே கற்கும் மாணாக்கர்களுக்கு நன்னூல் படிப்பித்தபின் படிப்பிக்கத் தகுந்த ஒருநூல் என்பது எனது கருத்து.

ஊர்காவற்றுறை.
கலியுகம் ௫௲௰
ஆனிமீ.

இங்ஙனம்,
ஐ. கு. கதிரைவேற்பிள்ளை.

# விஷயசூசி.

வடசொல்வேறுபாடு.
எழுத்தொருப்பாடு.
உபசருக்கக்கூறுபாடு.
இடைச்சொற்கூறுபாடு.
தத்திதாந்தப்பாகுபாடு.
பெயர்ச்சொற்பாகுபாடு.
வினைச்சொற்பாகுபாடு.
உரிச்சொற்பாகுபாடு.

## உதாரணநூற்பெயர்.

ஆசாரக்கோவை.
ஆசௌசதீபிகை.
இரகுவமிசம்.
இரங்கேசர்வெண்பா.
இராமாயணம்.
இலக்கணக்கொத்து.
உபதேசகாண்டம்.
கந்தபுராணம்.
கந்தரந்தாதி.
கந்தரலங்காரம்.
கலித்தொகை.
கல்லாடம்.
காஞ்சிப்புராணம்.
காரிகை.
கைவல்லியம்.
கோயிற்புராணம்.
சிவஞானசித்தியார்
சிவதத்துவவிவேகம்.
சிந்தாமணி.
சிலப்பதிகாரம்.
சிவதருமோத்தரம்.
சூளாமணி.
சேதுபுராணம்.
சைவசமயநெறி.
தணிகைப்புராணம்.
தக்கபரிபாஷை.
தாயுமானவர்.
திரிகடுகம்.
திருக்கோவையார்.
திருநூற்றந்தாதி.
திருமுருகாற்றுப்படை.
திருமுல்லையந்தாதி.
திருமூலமந்திரம்.
திருவரங்கத்தந்தாதி.
திருவானைக்காப்புராணம்.
திருவிளையாடற்புராணம்.
தேவாரம்.
தொல்காப்பியம்.
நல்லாப்பிள்ளை பாரதம்.
நன்னூல்.
நாலடியார்.
நான்மணிமாலை.
நீதிசாரம்.
நேமிநாதம்.
நைடதம்.
பதினோராந்திருமுறை.
பத்துப்பாட்டு.
பழமலையந்தாதி.
பாகவதபுராணம்.
பாரதம்.
பாரதவெண்பா.
பிரயோகவிவேகம்.
புறநானூறு.
புறப்பொருள்வெண்பாமாலை.
மணிமேகலை.
யாதவநிகண்டு.
வண்டுவிடுதூது.
வள்ளுவர்குறள்.
வாணன்கோவை.
வாதவூரர்புராணம்.
வாயுசங்கிதை
விதானமாலை.
வெங்கைக்கோவை.

# இலக்கண சந்திரிகை.

## வடசொல்வேறுபாடு.

ஆரியபாடைச் சொற்கள் தமிழ்ப்பாடையில் வந்து வழங்கும் விதிகூறிய இலக்கணநூலாருள்ளே நன்னூலார் ஒருவரே நன்குகூறினர். அவர் விதியுள்ளும் அடங்காமல் அநேக பதங்கள் ஒதுங்குகின்றன. அவற்றுள்ளும் அகப்பட்டு வாய்ந்த சில சொற்கள் இங்கே காட்டப்படுகின்றன.

---

### ஆகாரம்.

க. ஆரியத்துள்ள ஆகாரவீற்றுச் சொற்களுள்ளும் பல சொற்கள் தமிழில் வரும்போது நன்னூலார் கூறிய "ஆவீறையும்" என்றபடி ஐகாரமாக்காது தென்மொழியும் வடமொழியுமாகிய வருமொழிகளோடு சேர்த்துப் பலநூலில் வழங்கப்பட்டிருக்கின்றன.

உ-ம். வேசை. "வேசாக்கள்பின்செல்" (கந்தபு. பானு. சக.)
தயை. "தருமதயாவிஷ" (இராமா. கிட். பில. கo.)
சீதை "சீதாபவளக்கொடி" (இராமா. சுந். உருக். அ௫.)
மாயை. "மாயாவல்லபம்" (பாரதம்.
இச்சை. "இச்சாஞானம்" (சித்தியார்.)

---

### ஈகாரம்.

உ. ஈகாரவீறுகளுள்ளும் இடையிலே இகரமாவனவும் பல.

உ-ம். கிரீசன் — கிரிசன். பகீரதன் — பகிரதன். (பாரதம்.)
குளீரம் — குளிரம். மாரீசன் — மாரிசன். (சேதுபு. சேதுவ.)

---

## ஊ கா ர ம்.

௩. ஊகாரவிறுகளும் உகரமாகிவரும்.

உ-ம். சம்பூ — சம்பு. தநூ — தநு.

---

## இ று கா ர ம்.

௪. ஏழாமுயிராகிய இறு என்பது நன்னூலார் கூறியபடி "இரு" என வருதலன்றி இரு என்பதிலுள்ள (இர்—உ.) உகாரங் கெடுதலையும், உகாரம், மேலுள்ள மெய்யிலேற இர் என்பது கெடுதலையும் பொருந்தும்.

| | | | |
|---|---|---|---|
| உ-ம். | அமிருதம். | அமிர்தம். | அமுதம். |
| | விகிருதி. | விகிர்தி. | விகுதி. |
| | பிரகிருதி. | பிரகிர்தி. | பகுதி. |
| | பிதிருவனம். | பிதிர்வனம். | பிதுவனம். (சடலை.) |

---

## அ நு ச் சு வா ர ம்.

௫. மகாரமெய்யின் விகாரமாய் உயிரின் பின்னிற்கும் அநுச்சுவாரம் என்னும் ஒற்றைப்புள்ளி மகரமாய் இகரத்தோடாவது உகரத்தோடாவது கூடி வருதலையும், பின் மெய்க்கு இனமாதலையும், ககரவிகாரம் (கி) பின்வரப்பெறுதலையும், வருமெழுத்தாகத் திரிதலையும் பொருந்தும்.

| | | | |
|---|---|---|---|
| உ-ம். | மா௦சம். | மாமிசம். | மாங்கிசம். (கல்லாட. ௪00. எதுகை.) |
| | வ௦சம். | வமிசம். | வங்கிசம். (நீதிசாரம்.) ,, |
| | அ௦சம். | அமிசம். | அங்கிசம். (வாயுசங். அடி. ௬௨.) |
| | ச௦ஹம். | சமுகம். | சங்கம். |
| | ச௦சயம். | சமுசயம். | சஞ்சயம். (பிரயோகவிவேகம்.) |
| | ச௦சாரம். | சமுசாரம். | சஞ்சாரம். |
| | ச௦ + யோகம் = சய்யோகம் - கூட்டம். | | |
| | ச௦ + லாபம் = சல்லாபம் - நற்பேச்சு. (கந்தரனுபூதி.) | | |

---

## வி ச ர் க் க ம்.

௬. ஹ என்னும் மெய்யின் விகாரமாய் உயிரின்பின் நிற்கும் விசர்க்கம் என்னும் இரட்டைப்புள்ளி வருமொழி நோக்கி ஓகாரமாயும்,

ரகரமெய்யாயும் விகாரமடைந்தபடியே அம்மொழிகளோடு தமிழிலும் வழங்கப்படும். அன்றி ஆய்தமாதலும் ளகரமாதலும் உண்டு.

உ - ம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ச: + அகம் | = சோகம் | —அவன் நான். | | (சித்தி. கூ. எ.) |
| ச: + அயம் | = சோயம் | —அவனிவன். | | (கைவல்லியம்.) |
| மன: + ஹரம் | = மனோஹரம் | —மனத்தைக்கவர்வது. | | (பார. பதினெட்) |
| தப: + மயம் | = தபோமயம் | —தவரூபம். | | (கந்தபு. நகர.) |
| புன: + தகனம் | = புனர்த்தகனம் | -பின்னுஞ்சுடுதல். | | (ஆசௌசதீபி.) |
| யசு: + வேதம் | = யசுர்வேதம் | —இரண்டாம்வேதம். | | |
| அ: + போதம் | = அஃபோதம் | —நிலாமுகி. அ:—நிலா. | | |

ஆயு: — ஆயுள். தோ: — தோள்.

---

## ஐ கா ர ஔ கா ர ங் க ள்.

எ. பிரயோகவிவேகநூலார் ஐகாரம் எகரமாகும் என்றும், ஔகாரம் ஒகரமாகும் என்றுங் கூறினர். ஐகாரத்துள்ள யகரக்கூறு நிற்ப மற்றைய கூறுகளே எகரமாகும்.

உ - ம். தைவம் —தெய்வம். (பிரயோகவிவேகம். காரக.உ.)
கோங்கணம் —கொங்கணம். (பிரயோ.) (சிலப். கால்கோள்.)

---

## ஐ வ ரு க் க ம்.

அ. ஐவருக்கத்துள்ளே அகரத்தோடு கூடிநின்ற மூன்றும் மெய்கள் முதலிலும் இடையிலும் எகரத்தோடு வருதலையும்பெறும். ஐவருக்கம்; க. ச. ட. த. ப. என்பன.

உ - ம். கதம். கெதம்—போனது. (பார்த. பதினொன். கஎ.)
கந்த. கெந்தமாதனம். (இராமா. யுத். மீட். கசுகூ.
சன. செனகசெனனியர்—பிதாமாதாக்கள். (பாரத. வேத். சஎ.)
தசம். தெசம்—பத்து. (இராமா. யுத். மீட். கசகூ.)
தரித். தெரித்திரர்—வறியர் ( ,, உத். சீதை. கஎ.)
பல். பெலசேனன். (பாரத. பதினே. அ௦.)
பகுலம். பெகுலம்—அதிகம். (பாரத. பதினே. எகூ.)
குசன். குசென்—செவ்வாய். (திருவரங்கத்தந்.)
அம்புசம். அம்புசெம்—தாமரை (கந்தரந்தாதி.)

இங்கே மோனைத்தொடையினாலும், யமகத்தினாலும் எகரத்தோடு க வந்தன என்பது நிச்சயமாயிற்று.

---

௯. பவர்க்கம் வகாரத்தோடு பேதமின்றியும் நடக்கும்.

உ-ம். பாணலிங்கம்—வாணலிங்கம். கோபியர்—கோவியர்-இடைச்சிகள்.
உபமை — உவமை. பைரவர்—வைரவர்.
பிம்பம் — விம்பம். உபவனம்—உவவனம். (மணிமேகலை.)

---

௧0. ஏனைய க், ட், த், என்னும் மெய்கள் வருமொழி நோக்கித் திரிந்தபடியே அவ்விருமொழியோடுந் தமிழிலும் வழங்கப்படும்.

உ-ம். வாக் + மூலம் = வாங்மூலம் — சொன்மூலம். (பிரயோகவி.)
திக் + நாகம் = திங்நாகம் — திக்கியானை. (இரா.சுந்.கடவு.௪0)
சட் + முகன் = சண்முகன் — அறுமுகன்.
சட் + மதம் = சண்மதம் — அறுசமயம். (தாயு.)
சட் + நவதி = சண்ணவதி — தொண்ணூற்றாறு.
மருத் + சகன் = மருச்சகன் — அக்கினி. (பா. வார. ௧௩௬.)
ஆபத் + சகாயன் = ஆபச்சகாயன்—இடர்களைவோன். (தணி.கடவுள்வா)
பத் + நகம் = பன்னகம் — காலின்றிச்செல்வது.
சத் + மார்க்கம் = சன்மார்க்கம் — நன்னெறி.

## தகாரம்.

௧௧. மேலுந் தகரமெய் டகரமாதலையும், றகரமாதலையும் பொருந்தும்.

உ-ம். பிரதி—படி (பாரத. குரு. ௮.) பிரகிருதி—பகடி. (திருநூற்.)
பிரதிமை—படிமை (இராமா. யுத். மூல. ௧௪௬.)
பிரதிமா—படிமா (கோயிற்பு. நடரா. ௪௩.)
பிரதிச்சந்தம்—படிச்சந்தம் -சமரூபம் (திருக்கோவை. ௭௮.)
பத்தணம்—பட்டணம் (திருநூற். ௩.)
சரித் + புதல்வன் = சரிற்புதல்வன். சரித் - நதி. (பாரத. வாரணா. ௫௪.)
சத் + காரியம் = சற்காரியம். (சித்தியாருரை.)

---

## டகாரம்.

௧௨. டகரமெய் தகரமாதலையும், ளகரமெய்யோடு ஒத்துநடத்தலையும், ழகரமாதலையும் பொருந்தும்.

உ-ம். டோலா—தோலா; தோளா - ஊஞ்சல்.
டக்கை—தக்கை. டிண்டி—திண்டி.
சூடாமணி—சூளாமணி. (பாரத. நான்காம். சஉ.)
சௌடம்—சௌளம் - குடுமிவைத்தல். (இராமா. பால. திருவ. கஉசு.)
நீடம்—நீளம் - பறவைக்கூடு. (இராமா. சுந். திருவடி. ௩.)
துச்சலை—துச்சளை - திருதராட்டிரன் மகள். (பார. பதின்மூ. கசுரு.)
விநாடிகை—விநாழிகை. (பாரத. மணிமா. ககடு.)
நாடிகை—நாழிகை. பீடை—பீழை.

## ணகாரம்.

கங. நகரமெய் தன்முன்னின்ற ரகார ஷகார மெய்களை நோக்கி ணகரமாகத் திரிந்தபடியே தமிழில் வருதலையும் ரகரம் நீங்கியபின்னும் ணகரமாய் நிற்றலையும் ஞகரமாதலையும் பொருந்தும்.

உ-ம். சர + வநம் = சரவணம் —நாணற்காடு. (கந்தபுராணம்.)
அபர + அநம் = அபராணம் —பிற்பகல். (நாலடி.சுற்றம். எ.)
உத்தர + அயநம் = உத்தராயணம்—தைம்மாசப்பிறப்பு.
சம்பாஷ் + அநை = சம்பாஷணை —கூடிப்பேசல்.
வர்ணம் — வன்னம் — வண்ணம் - நிறம், எழுத்து.
அயனம் — அயணம் - செல்லுதல். (சிந்தா. குண. க.)
நாயம் — ஞாயம் - நீதி. (பாரத. இருட். ருo.)

## பகாரமகாரம்.

கச. மேலும் பகரம் மகரமாதலையும், மகரம் பகரமாதலையும் பொருந்தி நடக்கும்.

உ-ம். தபநீயம் —தமனியம் - பொன். (தணிகைப்பு. நார. சஎ. எதுகை.)
துந்துபி —துந்துமி - ஒருவாச்சியம். (பழமலையந். கக. திரிபு.)
பத்மராகம்—பற்பராகம். (பாரத. பதினெட். உ.)
பரஸ்மை —பரப்பை (பிரயோகவி. திங். உ.)

## யகாரம்.

கரு. யகரமெய் சிலசொற்களிலே முதலிலும் இடையிலுங் கெடுதலையும், முதலிலே தன்மேனின்ற அகரம் எகரமாதலையும் பொருந்தும்.

உ - ம். யசோதை—அசோதை - கிருட்டிணனைவளர்த்ததாய். (சிலப். அரும்.)
யுகம்—உகம். யோசனை—ஓசனை (சிந்தாமணி.)
பர்யங்கி—பைசந்தி - ஒருவாக்கு (சித்தி. க. உஉ.
சந்யாசி—சந்நாசி - துறவி (இரங்கேசர்வெண். நஎ. எதுகை.)
ஆதித்யன்—ஆதித்தன். ச்யோதி—சோதி.
யந்திரம்—எந்திரம் - பொறி. (கந்தபுரா. நாட்டுப்படலம்.)
யமுனை—எமுனை - ஒருநதி. (தணிகை. அகத். சஅ௬.)
யசமானன்—எசமானன் - தலைவன்.

இங்கே நடுவில் யகரமெய்யின்மேல் நின்ற உயிர் யகரத்தின் முன்னின்ற மெய்யின்மேல் ஏறினமையும், அம்மெய் இரட்டாதும், இரட்டியும் வந்தமையுங் காண்க.

---

## ரகாரம்.

கசு. ரகரமெய் சிலசொற்களில் இடையிற் கெடுதலையும், னகரமாதலையும், ழகரமாதலையும், ளகரத்தோடு ஒத்துநடத்தலையும், றகரமாதலையும், சொல்லின்முன் வருதலையும் பொருந்தும்.

உ - ம். கர்த்தா—கத்தா. அர்த்தம்—அத்தம்.
ப்ரதிகம்—பதிகம் - அவயவம். (பிரயோக. காரக ௩.)
ப்ரதிட்டை—பதிட்டை - தாபித்தல். (சேதுபு. இராமனரு. ௬௫.)
ப்ரமரம்—பமரம் - வண்டு. "பமரமும்மத." (பாரத. மூன். உஎ.)
ப்ரகிருதி—பகுதி - பிரதானம், பஞ்சபூதம், மூலகாரணம் (யாதவநிக)
வ்ரதம்—வதம். (சூளாமணி. இர. ௩சு.)
க்ரவுஞ்சம்—கவுஞ்சம் - அன்றில். (பாரத. பதினொன். சு.)
ப்ராசி—பாசி - கிழக்கு. (புறநானூறு. உ௨௧.)
இந்திர்யம்—இந்தியம். (இராமா. இரணி. எஉ.)
கர்மம்—கன்மம். தர்மம்—தன்மம். சர்மம்—சன்மம்.
அமிர்தம்—அமிழ்தம். மூர்த்தம்—மூழ்த்தம் (சிந்தா. முத். க௬௫.)
கரபம்—களபம் - யானை. (கையாற்குடிப்பது.) (கந்தபு.அசமுகிஉ. உஉ.)
கர்க்கடகம்—கற்கடகம் - நண்டு. (இராமா. அயோ. தைல. ௬க.
சார்வ—சாறுவதீர்த்தம். (கம்பரந்தாதி. உஎ. யமகம்.)
சர்வ—சறுவதீர்த்தம் சேதுபுராணம். (எதுகை.) சர்வ். ௬.)
இரகு—"ரகுகுலத்தவன்." (பாரத. பதின்மூன். ௩௬. பாட்டுமுதல்.)
இராய—"ராயசூய" (பாரத. சூது. க௫௬.) " "

---

## ல-காரம்.

கஎ. லகரமெய் ளகரமாதலையும், தமிழ்ப்புணர்ச்சிக்கேற்ப றகர மாதலையும், னகரமாதலையும், ரகரத்தோடு சமமாதலையும், ழகரமாதலை யும் பொருந்தும்.

உ - ம். மங்கலம்—மங்களம். (திருமுல்லையந்தா. கூஉ.)
சலம்—சளம் - நடுக்கம். (பாரத. சூது. உகரு.)
அல்பம்—அற்பம். கல்பம்—கற்பம்.
வால்மீகி—வான்மீகி - ஒருமுனிவன்.
குல்மம்—குன்மம் - செற்றை, தூறு.
அலத்தகம்—அரத்தகம். (தணிகைப்பு. வள். க0சு.)
சுக்கிலன்—சுக்கிரன். (உபதேசகாண்டம். அந்த. கூரு.)
சோளன்—சோழன். காளகம்—காழகம். (சிர். பது. சுரு.)
பலம்—பழம். பவளம்—பவழம். (சூளாமணி.)

## வகாரம்.

கஅ. வகாரமெய் தன்மேனின்ற உயிர், முதலுள்ள மெய்யிலே றத் தான் கெடுதலையும், தன்மேனின்ற அகரவுயிர் உகரமாய் மேலே றத் தான் கெடுதலை அல்லது சம்பிரசாரணமாகிய உகரமாதலையும், அவ்வுயிர் ஒகரமாய் மேலேறத் தான் கெடுதலையும், பகரமாதலையும் பொருந்தும்.

உ - ம். ச்வயம்பு—சயம்பு - தானேதோன்றியது. (சைவசமயநெறி.)
ச்வயம்வரம்—சயமரம் - தானேவரித்தல் (சூளாமணி. சய. கஉசு.)
ச்வாமி—சாமி - உடையவன். (சிந்தா. பதிகம். க.)
ச்வரம்—சுரம் - வெப்பு, உயிரெழுத்து. (பிரயோகவி.)
அச்வமேதம்—அசுமேதம் - ஒருவேள்வி. (இராமா. உத். அசுவ. கஉ.)
த்வக்கு—தொக்கு - தோல் (பாரத. இரா. க0ரு.)
ச்வம்—சொம் - பொருள்.
ச்வர்ணம்—சொர்ணம் - பொன்.
காவ்யம்—காப்பியம் - இலக்கியம். (பாரதம்)
திவ்யம்—திப்பியம் - மேலானது. (முல்லையந்.)

## ஷகாரம்.

கசு. முப்பத்தோராம் மெய்யாகிய ஷகாரம் முதலிலன்றி இடை யிலும், இறுதியிலுஞ் சகரமாதலையும், இடை கடைகளில் டகரமாதலை யும், ழகரமாதலையும், கெடுதலையும், யகரமாதலையும் பொருந்தும்,

உ - ம். மனுஷன்—மனுசன். (பாரத. நிவாத. சக. எதுகை.)
நிஷதம்—நிடதம், நிசதம். (கந்தபு. அண்ட. ஙரு.)
தோஷம்—தோசம் - குற்றம். (சிந்தா. கனக. உஉஅ.)
மஷி—மசி - மைக்குழம்பு. (சூளா. தூது. அங.)
உஷா—உடை - சூரியன்மனைவி. (இரகுவமி. திக். ஏரு.)
,, —உழை ,, (பாரத. சம்பவ. ஙச.)
கலுஷி—கலுழி - கலங்கனீர்.
சுஷுமூனை—சுழுமுனை - ஒருநாடி.
வைஷ்ணவி—வைணவி - எழுவகைமாதருளொருத்தி.
சுஷுத்தி—சுத்தி - ஓரவத்தை.
விஷமம்—விடமம் - சமமின்மை. (கலித்தொகை.)

---

## ஸகாரம்.

உ0. முப்பத்திரண்டாம் மெய்யாகிய ஸகாரம் தகாரத்தோடொத்து நடத்தலையும், முதலிற் கெடுதலையும் பொருந்தும்.

உ - ம். வாசனை—வாதனை - அழுத்தம். (சிவதரும. பரமத. சச.)
அசப்பியம்—அதப்பியம் - அவையல்கிளவி, தூஷணம்.
சுவாசம்—சுவாதம் - மூச்சு. (பாரத. நிவாத. கரு.)
ஸ்தூலம்—தூலம் - பருமை.
ஸ்மிருதி—மிருதி - ஒரு வைதிகசாத்திரம். (சித்தியார்.)

---

## ஹகாரம்.

உக. முப்பத்துமூன்றும் மெய்யாகிய ஹகாரம் முதலிற் கெடுதலையும், இடையிலே தன்மேனின்ற உயிர், முன்னின்ற உயிரோடு போய்த் தீர்க்க சந்தியாவது குணசந்தியாவது பெறவும், பெறாமல் உடம்படுமெய் பெறவும் தான் கெடுதலையும், தனக்கு முன்னின்ற மெய்யாவது பின்னின்ற மெய்யாவது இரட்டிக்கத் தான் கெடுதலையும், யகரமாதலையும், வாளாகெடுதலையும் பொருந்தும்.

உ-ம். ஹுங்காரம் —உங்காரம் - உம்மெனல். (கந்தபு. அக்கி. சுரு.)
ஹோமம் —ஓமம். ஹானி—ஆனி-கேடு. (இராமா. யுத. இர. அச.)
அஹங்காரம் —ஆங்காரம். (சித்தி. உ. ருசு.)
அஹலிகை —ஆலிகை - கவுதமன்மனைவி. (இராமா. கிட். நட். சு.)
சஹதேவன் —சாதேவன். (பாரத. பதினே. சுக.)
மஹாதேவன் —மாதேவன். (பாரத. கிருட்டிணன்றூது.)

மஹத்து —மாத்து - மேன்மை. (திருக்கோ. கஎக.)
ஆலஹலம் —ஆலாலம். (பாரத. நான்கு. ரு.)
இரஹசியம் —இராசியம் - மறைவு.
கலஹம் —கலாம் - சண்டை. (சிந்தா. கனக. உஎ.)
கிரஹணம் —கிராணம் - (விதான. குணகுண. சஅ.)
அக்கிரஹாரம்—அக்கிராரம் - பிராமணவீதி.
முகூர்த்தம் —மூர்த்தம். (கந்தபு. வள்ளி.)
மஹோதரன் —மோதரன். (இராமா. யுத். மாயா. உ.)
ஆஹுதி —ஆவுதி - அவிர்ப்பாகம். (இராமா. யுத். இரணிய. கூஅ.)
நரஹரி —நரவரி - நரசிங்கம். (பார. உலூக. க.)
பரிஹாசம் —பரியாசம், பரியாசகர். (சிலப்பதி. இந்திரவிழவு.)
பரிஹாரம் —பரியாரம் - முற்றுங்கடிதல்.
சிஂஹம் —சிம்மம் = “சிம்மாத்தல்” (சுந். தேவாரம்.)
சஂஹாரம் —சம்மாரம். சஹ்நு—சன்னு - ஒருமுனி.
வஹ்னி —வன்னி - நெருப்பு.
மத்தியாஹ்நம் —மத்தியான்னம். (சைவசமய.)
மஹிடன் —மயிடன். (நல். பார. மார். உகூஉ.)
மஹேந்திரம் —மயேந்திரம். (கந்தபு. மகேந். வீரவாகும. கக.)
மத்யாஹ்நம் —மத்தியானம். பிராஹ்மணன் —பிராமணன்.

---

க்ஷ.

உஉ. ககரமெய்யும், ஷகாரமெய்யுஞ் சேர்ந்த கூட்டெழுத்தாய் முப்பத்துநான்காம் மெய்யெனப்படும் க்ஷ என்பது முதலிலே ககாரமெய்கெட ஷகாரம் சகரமாதலையும், ஷகாரங்கெட அதன்மேனின்ற உயிர் ககாரத்திலேறி வருதலையும், இடையிலே ககாரங்கெட ஷகாரம் சகரமாயிரட்டித்தலையும், ஷகாரங்கெடக் ககாரம் இரட்டித்தலையும், ககாரம் டகரமாகச் ஷகாரம் சகரமாதலையும் பொருந்தும்.

உ - ம், க்ஷேத்திரம்— சேத்திரம்— கேத்திரம்.
க்ஷயம் — சயம் — கயம் - குறைவு.
க்ஷணம் — சணம் — கணம் - அற்பகாலம்.
க்ஷேமம் — சேமம் — கேமம் - சுகம்.
பிக்ஷை — பிச்சை. தக்ஷன் — தச்சன்.
பக்ஷம் — பக்கம். அக்ஷம் — அக்கம்.
பக்ஷி — பக்கி — பட்சி.
சாக்ஷி — சாக்கி — சாட்சி.

---

௨௩. இன்னும் கூட்டெழுத்துக்களுள்ளே பல, ஒன்று கெட ஒன்று இரட்டித்தலையும், ஒன்றுதிரிதலையும், ஒன்று இரட்டித்தலையும், இரட்டாமையையும் பொருந்தும்.

உ - ம். அஜ்ஞானம்—அஞ்ஞானம்: அச்சானம். (தணிகைப்பு. அகத். ௬௪.)
சத்துருக்னன்—சத்துருக்கன் (இராமா. திருவவதா. ௧௨௨.)
ஞக்மம்—நுக்கம் - நுண்மை (திருவி. உக். ௩௮.)
முக்தம்—முத்தம். வில்வம்—வில்லம். (திருவி. வளையெறி. ௨௫.)
வத்சம்—வற்சம் - குறி. கட்வாங்கம்—கட்டுங்கம், மழு. (திருவி.)
முத்கம்—முற்கம் - பயறு. கர்ப்புர—கப்புரவிளக்கு (திருவி.)
பக்வம்—பக்குவம் - முதிர்ச்சி. கல்ஹாரம்—கல்லாரம்.
வித்வான்—வித்துவான். துஷ்மந்தன்—துட்டந்தன். (சேதுபுரா.)
விச்வம்—விசுவம்—விச்சுவம். (சிவதத்துவவி)
அச்வ—அசுவத்தாமா—அச்சுவத்தாமா. (பாரத.)

---

௨௪. இன்னும் பல சொற்கள் பலவித விகாரமாகத் தமிழில் வரும்.

உ - ம். வ்யதிரேகம்—வெதிரேகம்—எதிர்மறை (சித்தி அவை.)
ஊர்வசி—உருப்பசி. சூர்ணம்—சுண்ணம்.
ஜைமினி—சயிமினி - ஒருமுனி. (கந்தபுரா. பாயி.)
அக்ஷௌஹிணி—அக்குரோணி. (பாரத.)
சஞ்ஞை—சமிக்கை - குறியீடு. (பிரயோ. காரக.)
மேனகை—ஏனகை. (இராமா. ஆர. சடா. ௪௪.)
கிருஷ்ணபக்—கண்ணபக்கம். (தணிகை. நந்தி. ௮௫.)
இலக்ஷ்மணன்—இலக்குவன். (இராமா. பால. திருவ. ௧௨௧.)
சிஷ்யன்—சீடன் - மாணாக்கன். (கைவல்யம்.)
காசியபன்—காசிபன். சுவப்னம்—சுவனம். (சேதுபுரா. அகவ. ௭௭.)
இல்வலன்—வில்வன். விபீடணன்—வீடணன். (நல். பாரதம்.)
ஆசார்யன்—ஆசான்—ஆசிரியன். (பாரதம்.)

---

# எழுத்துநிலைமாறல்.

## வடமொழி.

௨௫. சில சொற்கள் வடமொழியிலே எழுத்து நிலைமாறியபடி தமிழ்மொழியிலும் வழங்கப்படும்.

உ-ம். நாரிகேளம்—நாளிகேரம். வசி —சிவ.
ஸிஞ்ச —சிங்கம். அதகம் —அதகம்- குளிகை.
வைசாசி —வைகாசி. மதசரம்—மசரதம். (இராமா.)

## தமிழ்மொழி.

உசு. தமிழிலிலுஞ் சில சொற்களில் அப்படி நிலைமாறுதலுண்டு.

உ-ம். மிஞிறு — ஞிமிறு. பல்தறை—பறையலகு. (வண்டுவிடு.)
விசிறி — சிவிறி. சதை —தசை. (சிர். முத். எஉ.)

# எழுத்தொருப்பாடு.

உஎ. வடமொழியிற் சில எழுத்துக்கள் தம்முள் ஒத்து நடத்தல்போலத் தமிழ்மொழியிலுஞ் சில எழுத்துக்கள் தம்முள் ஒத்துநடக்கும்.

க. இகரமும் எகரமுந் தம்முள் ஒத்து நடக்கும்.

உ-ம். வியர்த்தல்—வெயர்த்தல். நிதி —நெதி.
சிவந்த —செவந்த. கிண்டி—கெண்டி. (தணிகைப்.நாடு)

உ. எகரத்தோடு சேர்ந்த யகரமெய்யும் ஏகாரமும் ஒத்து நடக்கும்.

உ-ம். பெயர் —பேர். வியர்—வேர்.
பெயரன் —பேரன் "அதிபதிபெயரனே" (பார. பதினாள். கஉஉ.)
வெயர் —வேர்வு. செயல்—சேல். (கந்தரந்தாதி.)

ங. உகரமும் ஒகரமுந் தம்முள் ஒத்து நடக்கும்.

உ-ம். தொடை—துடை. (நால்வர்நான்மணி. அந்தாதியில்.)
நுங்கு —நொங்கு. துளை—தொளை.
உதிமரம்—ஒதிமரம். (பழமலையந்தாதி.)

ச. ககரமும் யகரமுங் கெடுதலையும் பொருந்தும்.

உ-ம். அகன்ற —ஆன்ற, ஆன்றோர்.
பகல் —பால் - பாதி. பகு+அல்.

பகுத்து —பாத்து. (வள்ளுவர்.)
யானை —ஆனை. யாடு —ஆடு.
யார் —ஆர். யாத்த —ஆத்த. (இராமா.)
பேய் —பே. (சிங். சுரமஞ். ௯௦.)
உரியசீர் —உரிச்சீர். (காரிகை.)
வேய்தனை—"வேதனைவாய்வைத்தமாயன்." (திருவரங்.)
போற்றிய—போற்றி - காக்க. (திருவி. திருக்கூ. ௨௦.)

---

௫. சகரஞகரங்களுந் தகரநகரங்களும் ஒத்து நடக்கும்.

உ-ம். தெரிந்து —தெரிஞ்சு. (இராமா. அயோ. மங். ௧௪.)
முந்து —முஞ்சு. (கந்தபு. யுத். மீட். ௧௪.)
மைந்தன் —மஞ்சன். நைந்து—நஞ்சு. (சேதுபு.)
அத்தன் —அச்சன் - பிதா. (தணிகைப்பு.)
வித்து —விச்சு. "விச்சதின்றியே" (திருவாசகம்.)
பித்தன் —பிச்சன். வைத்த—வைச்ச. (சேதுபு.)

---

௬. சகரத்தோடு யகரமும் ஒத்து நடக்கும்.

உ-ம் உசா —உயா. (பாரத-பதினே-கரு௨.)
அசாவுயிர்த்தல்—அயாவுயிர்த்தல். (சிந்தாம.)
வசம் —வயம். அசந்து —அயந்து.

---

௭. ணகரமும் நகரமும் ஒத்து நடக்கும்.

உ-ம் நண்பகல்—நன்பகல். (சிந்தா. நாமக. அரு. எதுகை.)
நுனி —நுணி. "நுணிநிறுத்தி" (பாரத. பதினே. ௬௨.)

---

௮. தகரமும் றகரமும் ஒத்து நடக்கும்.

உ-ம். ஒத்தி —ஒற்றி. குத்தல் —குற்றல். (பாரத.)
செத்தை—செற்றை. பத்தை—பற்றை.

---

௯. ரகரமும் னகரமும் ஒத்து நடக்கும்.

உ-ம். வெர்—வென். சீமார்—சீமான்,

---

௧௦. மகரமும் வகரமும் ஒத்து நடக்கும்.

உ-ம். மிஞ்சுதல் —விஞ்சுதல். மீறுதல்—வீறுதல்.
வினைக்கேடு—மினைக்கேடு.
வேய்தல் —மேய்தல்.

---

கக. ரகரம் றகரத்தோடும் லகரத்தோடும் ஒத்து நடக்கும்.

உ-ம். தரை —தறை - பூமி. (இராமா. பாயி.)
வரட்சி —வறட்சி. முரடு—முறடு.
கரடி —கறடி. (பாகவத. காளி. உக.)
தாராட்டல் —தாலாட்டல். நெரிப்பர்—நெறிப்பர். (சூளா. துற.)
பிரிதல் —பிறிதல். (பாரத. பதினா. கஅ.)
குரைத்தல் —குலைத்தல். (கல்வளையர்.
உரவுநீர் —உலாவுநீர். (சிந்தாமணி.)

---

கஉ. லகரம் ளகரத்தோடும் னகரத்தோடும் ஒத்துநடக்கும்.

உ-ம். மெல்ல —மெள்ள. (பாரத. தீர்த்த. ருஅ.)
அலமரு —அளமரு. (சிந்தா. நாமகள். உ0. எதுகை.)
நல்செனை—நன்செனை. (பாரத. பதினே. அசு.)
வியல்புவி—வியன்புவி. அகல்பணை—அகன்பணை.

---

கங. ளகாரமும் ழகாரமும் ஒத்து நடக்கும்.

உ-ம். கவளம்—கவழம் (சூளாமணி. துறவு. கககூ.)
காளகம்—காழகம்—கருமை. (சிந்தா, எதுகை.)

---

கச. ணகாரமும் ஞகாரமும் ஒத்து நடக்கும்.

உ-ம். அன்னை—அஞ்ஞை. (சிலப்பதி. கனாத்)
பூனை —பூஞை.

---

கரு. ரகர ழகரமெய்கள் கெடுதலையும் பொருந்தும்.

உ-ம். பார்த்திருந்து—பாத்திருந்து. (தணிகைப்பு. நகர.)
மூழ்த்தம் —மூத்தம். (இரா. அயோ. சூர். கூரு.)

---

# உபசருக்கக்கூறுபாடு.

உஅ. அவ்வியயங்களுள்ளே பிர முதலியவைகள் வினைப்பெயர்களின் முன் வந்து விசேடமான பொருளைக் காட்டும்போது உபசர்க்கம் எனப்படும். பிரயோகவிவேகநூலார் உபசர்க்கம் இருபதென்பர்.

பிர—மிக, பதில். பிரபலம்—மிகுவலி. பிரதாபம்—புகழ்.
பரா—எதிர். "பராமுகம்" (கந்தபு. வள்.) பராசயம்.
அப—அப்பால், பிரிந்து. அபமிருத்து. அபதேசம்-கபடம். அபசவ்வியம்.
சம்—கூட, நன்று. சங்கமனம், சஞ்சீவி. சமாப்தி, சம்பூரணம். [ரத.)
அநு—பின், ஒப்பு. அநுசன்—பின்பிறந்தோன். அநுவுரு, ஒத்தவுரு. (பா
அவ—கீழ், அப்பால். "அவமதிப்பும்" (நாலடி. பெருமை. ௩.) அவமானம்.
நிர்—வெளி, இன்மை. நிக்கிரகம். நிர்க்கதம்—வெளியிற்போதல்.
துச்—கெட்ட. துச்சாரி—கெட்டநடையுடையோன். (நாலடி.)
துர்—கெட்ட, அருமை. துராலோசனை. துர்லபம்—அடைதற்கரியது.
வி—இன்மை, விசேடம். விபங்கம்-பாவமின்மை. விசயம்-விசேடவெற்றி.
ஆ—வரைக்கும். ஆகன்னம்—காதுவரைக்கும். (பாரத. தீர்த்த. சக.)
அதி—மேலே, மிகுதி. அதிக்கிரமம்—கடத்தல். அதிவேகம்.
அபி—உம், கூட, எதிர். அபிமானம். அப்பியாகதர் -விருந்தர். அபி-எதிர்.
ஆகதர் - வந்தோர். (திருவானைக்காப்புராணம்.)
சு—நல்ல. சுவணம். (இராமா. சுந். ஊர். எக.)
உத்—மேலே. உற்பவம். உத்தமம்.
பிரதி—எதிர். - பிரத்தியுபகாரம், பிரத்தியக்ஷம்.
பரி—சுற்ற - பரிவேடம் - சுற்றவளைப்பது. பரிசாரகர்.
உப—கிட்ட. உபக்கிரமம் - உபகாரம். உப்பராசன்.

இவையெல்லாம் பெரும்பாலும் தமிழ்ப்பாடையிலே வந்து வழங்கப்பட்டன. இன்னும் பல பொருளன. இவற்றுள்ளே பிரிவின்றி ஒருசொன்னீர்மையவாய்ச் சிலவற்றோடு சேர்த்து வழங்கப்பட்ட சிலசொற்கள் அவற்றை நீக்கியும் வழங்கப்பட்டன.

உ - ம். ஆயோதனம்—யோதனம் - போர். (பாரத. பதிமூ. எஅ.)
பிரபஞ்சம் —வஞ்சம். (சித்தியார். க. கரு. )
உற்பவம் —பவம்.

---

உக. பிரயோகவிவேகநூலார் தமிழ்ப்பாடையிலும் வினைக்கும் வினைப் பெயர்க்கும் முன்வருங் கை, கால், தலை, மேல், மீ, ஒல்லை, வல்லை, புறம், அகம், இலம் என்பன உபசர்க்கம் என்பர்.

உ-ம். கை—கைகூடும் (வள்ளுவர்.) கைகடந்த, கையிகந்த.
கால்—கால்சீத்தல். (தணிகை. வள்ளி. கரு.)
தலை—தலைக்கூடி (வள்ளு. "உவப்பத்தலைக்கூடி.) தலைதடுமாற்றம்-(கந்த
மேல்—"கல்லாதமேற் கொண்டொழுகல்." (வள்.)
மீ—"மீக்கூறுமன்னனிலம்." (வள்.)
ஒல்லை—"ஒல்லையுணரப்படும்."
வல்லை—"வல்லைக்கெடும்."

இவற்றோடு கண், வாய், கடை முதலியனவும் உபசர்க்கம் போலக் காணப் படுகின்றன.

உ-ம். கண்—"வருடாழிவழிகண்டேச் செற்றவர்." (குளா. மங். ரு.)
" "செற்றூர்கண் சாயயான்." (கலித். முல்லை. ௪.)
வாய்—"வாயழிகடாத்த." (கலித். குறிஞ்சி. க௦.)
கடை—"கடைப்பிடித்து." (இராமா.)

புறம் முதலியவற்றிற்கு அவர்காட்டிய உதாரணங்களாகிய "புறங்கொடுத்தல், புறந்தருதல், புறப்படல், அகப்படல், இலம்படுபுலவர்" என்பன புறத்தைக் கொடுத்தல், அகத்திற்படல், என விரிதலானும், "இலம்படுபுலவர்" என்பதற்கு "வறுமையுற்ற" எனவுரைத்தலானும் (புறநா. கருரு). அது இல்+அம் எனப் பிரிக்கப்படுதலானும் "இலமென் கிளவி" எனலானும் (தொல்) நன்கு பொருந்தில.

## உபசர்க்கமாறுபாடு.

க௦. வினையடியாகப் பிறந்த சிலசொற்கள் உபசர்க்கங்களை மாறி மாறிச் சேர்த்தலினால் வேறுவேறு பொருளாக மாறுபடும்.

### தாபம்.

உ-ம். அநுதாபம்—பின்விசனப்படுதல்.
பரிதாபம்—துக்கம்.(பா.பதினே.உ௦எ.)
சந்தாபம்—வருத்தம். (வெங்கை.)
உபதாபம்—வெம்மையாதல்.
பிரதாபம்—மகிமை.(பார.பதி)
உத்தாபம்—குளிர்காய்தல்.

### நயம்.

அநுநயம்—பிரார்த்தித்தல்.
அபநயம்—எடுத்துப்போதல்.
உந்நயம்—உயர்த்தல்.
நிர்ணயம்—நியமித்தல்.
விநயம்—வணக்கம்.
ஆநயம்—கொண்டுவருதல்.
உபநயம்—கிட்டுதல்.
துர்நயம்—தீமை (குளாம. முத். ௬உ.)
பரிணயம்—விவாகம்.
பிரணயம்—வணக்கம்.

## ஹாரம்.

அநுஹாரம் —பார்த்துநடத்தல். அபிகாரம் —தாக்குதல்.
உபகாரம் —உதவுதல். அபகாரம் —கவர்தல். (நால. பொ.)
பிரஹாரம் —அடித்தல். நீகாரம் —பனியுறைதல். (பார.கா.)
சங்காரம் —கொல்லல். விகாரம் —விளையாடல், மகிழ்ச்சி.
பரிகாரம் —முற்றுமழித்தல். பிரதிகாரம் —காத்தல்.
அத்தியாகாரம்—விவரித்தல். பிரத்தியாகாரம்—மிகத்தியானித்தல்.

## கடம்.

உற்கடம் —போதல். பிரகடம்—வெளிப்படல்.
சங்கடம் —வருத்தம். விகடம் —பயம். (இரா. நாகபா. கசுசு.)

## சயம்.

அபசயம் —குறைதல். உபசயம்—மிகுதல். (பிரயோ. திங்.)
பரிசயம் —பழக்கம். (பாரத.) சஞ்சயம்—கூட்டிச்சேர்த்தல்.
பிரசயம் —குவித்தல். (தர்க்கபரி.) நிசயம் —குவித்துவைத்தல்.

## கிரமம்.

அநுக்கிரமம்—கிரமப்படி. அதிக்கிரமம்—கடத்தல். (இரா.உத்.வரை.எக)
பராக்கிரமம் —வீரம். (பாரத.) விக்கிரமம் —மேற்கொள்ளல். (பார.பன்னி.)
ஆக்கிரமம் —உதித்தல் சங்கிரமம் —அகற்றல்.
உபக்கிரமம்—ஆரம்பம். பரிக்கிரமம் —அதிசயம்.

## கமனம்.

அபகமனம் —விழுதல். அதிகமனம்—மிகப்போதல்.
அபிகமனம் —புணர்ச்சி. நிர்க்கமனம்—வெளியிற்போதல்.
அவகமனம்—அறிதல். சங்கமனம் —கூடப்போதல்.
ஆகமனம் —வருதல். சுகமனம் —இலகுவிற்போதல்.

## சாரம்.

அதிசாரம் —கடத்தல். உபசாரம் —உதவுதல். (சித். உ. உரு.)
அநுசாரம் —பின்றொடர்தல். விசாரம் —பகுத்தறிதல். (பாரத.சூது.ச.)
ஆசாரம் —பயிற்சி.(சித்.உ.உரு) பரிசாரம் —ஏவல். (சிலப். மனைய.)
பிரசாரம் —வெளிப்படுத்தல். அபிசாரம் —அழித்தல். (கோயிற்.)

## பவம்.

அபிபவம் —தோல்வி. பரிபவம்—இகழ்ச்சி. (பாரத. கிருட். கருச.)
விபவம் —செல்வம். உற்பவம்—பிறப்பு. (பாரத. பதினே. கச.)
அநுபவம் —நேரேயறிதல். சம்பவம்—பிறப்பு. (பாரத. பதினெ. எசு.)
பராபவம் —தோல்வி. பிரபவம்—முதன்மை.

## லாபம்.

அநுலாபம்—சம்பாஷணை.
அபலாபம்—இகழ்தல்.
ஆலாபம்—பேசுதல்.
பிரலாபம்—பிதற்றல்.
விலாபம்—அழுதல். (சிந்தா.)
சல்லாபம்—சம்பாஷணை. (கந்தபு.)

## வாதம்.

அபவாதம்—நிந்தை.
பரிவாதம்—புறங்கூறல்.
சம்வாதம்—நிகழ்ச்சிகூறல்.
பிரதிவாதம்—மறுமொழி.
அநுவாதம்—பின்னுஞ்சொல்லல். (திருவி.)
விவாதம்—சண்டை. (பார. நிவாத. கரு.)
பிரவாதம்—அறிவித்தல்.
உபவாதம்—வெளிப்பாடு.

## மானம்.

அபிமானம்—பெரிதாயெண்ணல்.
அவமானம்—இகழ்தல்.
உபமானம்—சமமாதல்.
விமானம்—அளத்தலின்மை.
பரிமாணம்—அளத்தலின்மை.
அநுமானம்—எண்ணியறிதல். (இராம. உத்.)
சம்மானம்—நன்குமதித்தல்.
நிர்மாணம்—சிருட்டித்தல்.
உன்மானம்—நிறை. (பிரயோகவி.)
பிரமாணம்—திருட்டாந்தம்.

## கிரகம்.

அநுக்கிரகம்—கிருபை.
சங்கிரகம்—திரட்டல்.
பரிக்கிரகம்—அங்கீகரித்தல்.
உபக்கிரகம்—பிடித்தல்.
நிக்கிரகம்—தண்டித்தல். (சித்தியா.)
அவக்கிரகம்—எதிர்த்தல்.
விக்கிரகம்—போர்.
பிரதிக்கிரகம்—உடன்பாடு.

## காரம்.

அதிகாரம்—ஆளுதல்.
பிரகாரம்—படி, சமம்.
விகாரம்—மாறுபாடு.
பரிகாரம்—அழுத்தம்.
பிரதிகாரம்—மாறுசெய்தல்.
உபகாரம்—உதவி.
அபகாரம்—தீங்கு.
அநுகாரம்—பாவனை.

## தேசம்.

ஆதேசம்—கட்டளை.
உபதேசம்—போதித்தல்.
சந்தேசம்—தூது.
உத்தேசம்—பெயரளவிற்சொல்லல். (திருவி)
பிரதேசம்—கட்டளை.
நிர்த்தேசம்—பெலனுதல்.

## யோகம்.

உபயோகம்—தகுதி.
வியோகம்—பிரிவு.
பிரயோகம்—செலுத்தல்.
விப்பிரயோகம்—நிந்தை.
அநுயோகம்—கண்டித்தல்.
சம்யோகம்—கூடுதல்.
நியோகம்—அனுப்புதல்.
அபியோகம்—முறைப்பாடு.

காசம்.

அவகாசம்—ஆறியிருத்தல். விகாசம் —மலர்தல்.
நிர்க்காசம்—தள்ளுதல். பிரகாசம் —ஒளிர்தல்.

தானம்.

அபிதானம் —பெயரிடுதல். அவதானம்—கவனம்.
பிரதானம் —முதலாதல். உபதானம்—தாங்குதல், தலையணை.
நிதானம் —வைத்தல். பரிதானம்—கைக்கூலி.
பிரவிதானம்—பகுத்தல். ஆதானம் —அடக்குதல், (சேதுபு.)

---

# இடைச்சொற்கூறுபாடு.

## அவ்வியயம்.

௩௦. இந்த உபசர்க்கங்களன்றி இன்னும் அவ்வியயங்கள் பலவுள. அவைகளுள்ளே பெரும்பாலன தமிழிலும் வழங்கப்பட்டன. அவ்வியயமாவது, வேற்றுமையுருபுகளையும், ஆண்பால் முதலிய பால்களையும், ஒருமை, இருமை, பன்மைகளையும் பெறாது பொதுவாக நிற்கும் இடைச்சொற்கள்.

வரலாறு.

அ—இன்மை. அமலம் - மலமின்மை.
,, அன்மை. அப்பிராமணன் - பிரமணனல்லாதவன்.
,, எதிர்மறை. அதர்மம் - பாவம்.

இங்கே ந என்பதிலுள்ள (ந்+அ) நகாரமெய் மெய்ம்முதனோக்கிக் கெட அகாரம் நின்று இன்மை முதலியவற்றை உணர்த்திற்று. வருமொழியுயிராயின்; அந் என நகரமெய் பின்னும் அகரவுயிர் முன்னும் நிற்கும். (நேமிநாதம். எழு. கக)

அந்—அநாதி —(அந்+ஆதி) ஆதியின்மை.
,, அநாசாரம்—ஆசாரமின்மை.

வடநூல் வியாகரணிகள் நஞ்ஞு என்பர். இவற்றோடு அற்பம் அதற்கொப்பு என்னும் பொருளையுஞ் சேர்ப்பர்.

அந்—அநுதரம்—அற்பவயிறு.
,, அப்பிராமணன்—பிராமணனையொத்தவன்.

அகஸ்மாத்—தற்செயலாய், காரணமின்றி.
அக்கிரம்—முதல். "அக்கிரபூசனை" (பாரத. இராச. ௧௧௨.)
அகம்—நான். (சைவசமய. ஆசா. ௨.)
அகோ—ஆச்சரியம், தயை, நிந்தை, அழைப்பு. (தாயுமான.)
அடாத்து—வலாற்காரம்.
அத—கீழ், பின். "அதோபாகம்" (சிவதரும. கோபு. ௧௦.)
அதவா—அல்லது. (பாரத. பதினே. ௨௯௨.)
அதி—மிக, கடத்தல். அதிகம். (உப.)
அத்தா—அத்தாட்சி. (இலகுகௌமுதி.)
அநு—பின், ஒப்பு, கிரமம். (உப.)
அந்தர்—நடு, சமீபம். "அந்தர்வேதி" (கந்தபு. நகர. ௭௯.)
அப—புறம்பு. "அபசாரநிந்தை" (திருப்புகழ்.)
அபி—எதிர், போல, முன். (உப) "அப்பியாகதர்" எதிரேவர். (திருவா.)
அமா—சமீபம். "அமாத்தியன் - கிட்டவிருப்போன்" (வள்ளுவ.)
அலம்—போதும், பூஷணம். "பிறவியல்மலமால்" (கந்தபு.சயந்தன்பு.௭௭)
அவ—கீழ். "அவநதர்" தலைவணக்கமுடையோர். (கோயிற்பு-நடரா.)
அஸி—ஆகின்றாய். (சித்தி. பர. மாயாவாதிமறு. ௧௮.)
அஸ்தம்—மறைதல். "குடபால்வீழுமத்தப்பொழுதில்" (இரா. உத். வரை)
ஆ—வரைக்கு. (உப.) "ஆபாதகுடங்கருதித்தொழுதார்" (பாரத.)
வருத்தம், இரக்கம். "ஆவம்மாவம்மா" (சிந்தா. கனக. ௨௪௮.)
ஆஹா—துக்கம், மகிழ்ச்சி. "ஆகாவெனலால்,, (நைடதம்)
ஆசு—விரைவு. "ஆசுபோமிவுளி" (பார-பதினே-௧௭.)
ஆதஹா—சீ, இகழ்ச்சி. "ஆதகாவென்னவன்னம்" (இரகுவ. நாட். ௪௮.)
ஆம்—உடன்பாடு. "அன்றென்றுமாமென்றும்" (பதினொராந்திருமுறை)
இக—இங்கே. "இகவானஞ்சமாடி" (கம்பரந்தாதி.)
இதரம்—அன்னியம். "இதரங்கடந்து,, (பாரத-துருவா-௧௨.)
உத்—(உப) மேலே, மேன்மை. "உந்நாபன்" (இரகுவமி.)
உப—(உப) கிட்ட, கூட, தயை. "உபேந்திரன்" "உபாங்கம்."
உம்—கோபம், பயப்படுத்தல். "உங்காரத்தின்,, (கந்தபு. அக். ௯௯.)
உபாஞ்சு—இரகசியம். (சைவசமயநெறி.)
ஏ—பிரத்தியக்கம், துக்கம். "ஏயெனவெழுந்தன" (கந்-திருப்ப-௪.)
ஓம்—உடன்பாடு. "ஓமென்றுரைத்தருளி" (பார. கிருட். ௪௦.)
க—சொல்லினிறுதியில்வரும் ஓரவ்வியயம். "நாயன்-நாயகன்" (பார-பதி.)
கு—அற்பம், நிந்தை. "குநிதனங்களவிற்கவர்ந்தவன்" (தணிகை.அக. ௩.)
கிஞ்சித்—அற்பம். "கிஞ்சிஞ்ஞத்துவம்" (சித்தியுரை.)
சடிதி—விரைவு. சாக்ஷாத்—பிரத்தியக்ஷம், சமம். (தாயு.)
சுஷ்டு—நன்குமதிப்பு. "பிறராற்பெருஞ்சுட்டு" (நாலடி.)

திக்—நிந்தை, அதட்டல். "திக்கரித்து" (திருப்பு.)
தூர—தூரம். "தூரவிடல்" (நாலடி.)
ந—இன்மை. "நமித்திரர்"—பகைவர். (இராம. திருவவ. ௬௦.)
நம—வணக்கம். "கந்தநம வைந்துமுகர்" (கந்தபுரா. திருவி. அஉ.)
நாநா—பலவிதம். "நாநாவரிசை" (திருவி. வேல். ௬௦.)
நாஸ்தி—இல்லை. "நாத்திகம்" (காஞ்சி. கழு. உ௦அ.)
பச்சாத்—பின். "பச்சாத்தாபம்" (தாயுமான)
பரம்—பின். "பரம்பரை" (கோயிற்புரா. பதஞ்சலி. உஅ.)
பரா—(உப) எதிர். பராக்கு. பரா + அக்கு. பாராமை. (வள். அதி. ௩எ.)
பரி—சூழ, அலங்காரம். "பரிகம்"—அகழ்.
பிரதி—(உப) எதிர், ஒப்பு. "பிரத்தியவாயம் (சிவதரு. பாவ. ௯௦௦.)
பிராக்—முன். பிராகபாவம்—முன்னின்மை. (தர்க்க.)
புனர்—பின், விசேஷம்.
வா—அல்லது "அதவா.,,
வி— (உப) விசேஷம், இன்மை.
விநா—தவிர, கூடுதலின்மை. "அவிநாபாவம்" அ + விநா. (சித். அளவை.)
விருதா—வீண். "விருதாகோட்டி" (தாயுமா)

---

௩க. இவ்விதமான இடைச்சொற்கள் பல. இங்கே அவையுணர்த்துங் குறிப்புப்பொருள்கள் சிலவற்றோடு சில எழுதப்பட்டன! தமிழ்ப்பாடையிலும் இவ்விதமான அவ்வியயங்களுள.

அஆ—இரக்கம்— "அஆஇழந்தான்" (நாலடியார்)
அப்பா—அதிசயம். "என்னப்பாவிவ் வெழுபதுவெள்ளமும்" (இரா.மூல.)
அம்மா—இரக்கம். "வெறும்பொருளதம்மா" (சிந். முத். உ௬.)
அல்லதூஉம்.—அன்றியும். "அல்லதூஉமவனுடைத்துணைவர்" (இரா.பிணி)
அன்றே—நிச்சயம், சம்மதி. "நீயறிதியன்றே" (பார. கிருட். ௩)
இதா—இதோ. "மற்றிதாதோன்று,, (சிந். பது. ௬எ.)
இன்னே—இப்பொழுது. "பாவையின்னேபரிவொழிந்து" (சிந்.பது.கக௬)
இன்னணம்—இப்படி. "செல்வர்க்கின்னணஞ்சேறலில்" (சிந்.நாம.ககக)
இனிது—நன்று. "இனிதினின்மலர்ந்த" (சிந். மண். ௬அ)
உடன்—அப்போது. "உடனேவந்துபொருநிருபர்" (பாரத.பன்னி.எக௬.)
,, —கூட. "உடனிருத்தி" (பாரத. கிருட். ௬.)
எல்லே—இரக்கம். "எல்லேயுணைநம்புவது" (கந்தபு. அக்கினிமு. உ௬௦.)
என்றால்—விசேடம், நிச்சயம். "அனையதேபட்டதென்றால்" (சிந்.குண.)
என்னும்—சிறிதும். "என்னுமருந்தவமில்லார்களாகில்" (சிந்.முத். ௩அ௬.)
,, எல்லாம். "என்னுடையரேனும்" (வள். அதி. அறிவு.)

ஏனை—மற்றை. "ஏனையாவரும்" (சிந். முத். ௩௪௯.)
ஐயகோ—இரக்கம். "ஐயகோவிதுவருவதே" (கந்த. குமார. ௯௯.)
ஐயவோ— „ "ஆற்றலெனையவோ" (சிந். கேம. ௩௦௦.)
ஒருசிறிதும்—மிகஅற்பமும். (பாரத. இரௌ. ௯௭.)
ஒருபடி—ஒருவாறு. "ஒருபடிபொழுதுசென்றது" (பாரத. பதின்மூன்.)
ஒன்றும்—சிறிதும். "ஒன்றுநீர்கவலவேண்டா" (சிந். குண. ௨௭௯.)
ஒன்றின்—அல்லது. "ஆனைபாயுமொன்றின்" (இராமா. கிட். கலன்.)
காண்—நன்று. "ஆரணங்காணென்பர்" (திருக்கோவை.)
சிச்சி—இகழ்ச்சி. "இடித்துண்கை-சிச்சி,, (வாக்) (இரா. ஆர. மாரீ.௩௪௯.)
சீசி—இகழ்ச்சி. "சீசியுற்றதுவென்" (இரா. கும்ப. ௨௯௭.)
துவர—முற்ற. "துவரமுடித்ததுகளறுமுச்சி" (திருமுருகா.)
பின்—விசேடம். "நீதவறிற்பினையார்" (பாரத. பதின்மூன். ௩௯.)
பெயர்த்தும்— } பின்னும். "பேர்த்துமாங்கோர்பெருங்கை"
பேர்த்தும் — } (கந்தபுராணம் சிங்க. ௪௧௫.)
மறுக்க—பின்னும். "மறுக்கவெய்யா" (கம்பரந்தாதி.)
மறுதரம்— „ "மறுதரம்போதியென்" (சிலப். நாடு.)
மறித்தும்— „ "மறித்துமோர்செயற்குரிய" (இரா. சுந். பொழி. ௩.)
மறுவலும்— „ "குளிர்ப்பக்கூறிமறுவலும் புல்லி,, (சிந். குண. ௨௦௨.)
யாதும்—சிறிதும். "யாதும்வளராப்பிறை,, (கம்பரந்தாதி.)
வல்லே—விரைய. "மருப்புவல்லேயுடைந்து,, (சிந். மண். ௩௭௫.)
வேறும்—தனித்தும். "ஈட்டமும்வேறுமாக,, (சிந். கனக. ௩௮௫.)

---

## வேற்றுமையுருபு.

௯௨. வடமொழியிலடைந்த வேற்றுமையுருபுகளோடுஞ் சில சொற்கள் தமிழ்மொழியில் வழங்கப்பட்டன.

௨-ம். அரிந்தமன்—பகையை யழிப்போன். (இராமா)
உரங்கமம்—பாம்பு. (உரத்தாற்செல்வது.) (பாரதம்.)
நாராயணாயநம—நாராயணனுக்கு நமஸ்காரம். (பாரதம். பதினெட்டு)
மாதுப்பிரபிதாமகர்—மாதாவுடைய பிரபிதாமகர். (சேதுபு. தரா. ௫௯.)
பங்கேருகம்—சேற்றிற்பிறந்தது—தாமரை.

---

## வினைச்சொல்.

௯௩. சில வினைச்சொற்களும் வடமொழியில் வழங்கியபடி தமிழிலும் வழங்கப்பட்டன.

உ-ம். தேஹி—கொடு. "தேவேந்திரன்வந்து தேகியென்றால்,, (பாரதவெ.)
கெச்ச—போ. (சிவதரு. கோபு. ௧௨௧. ௪ய—(தணி. வள்.)
சர்ப்ப—விரைந்துசெல். (திருவி. இக். ௬௪. சீவ—சீவி. (சிர்- நாமக.)

# தத்திதாந்தப் பாகுபாடு.

௩௪. பெரும்பாலும் இறுதி விகாரப்பட்டும், முதல் விருத்தியாகியும் தத்திதத்தோடு புணர்ந்து முடியும் பெயர்கள் தத்திதாந்தம் என்றுசொல்லப்படும். தத்திதம்—பெயர்விகுதி. தத்திதாந்தங்கள் தத்தம் மூலப் பெயர்ப்பொருட்குப் பிள்ளை, சந்ததி, சம்பந்தம், தலைமை முதலிய பொருள்களிலே அ, இ, ஏய, ய, ஆயந், ஈய, இக முதலிய விகுதிகளையுடையதாக வரும்.

### அகார விகுதி.

உ-ம். சைவன்—சிவனைக் கடவுளாகவுடையோன்.
யாதவன்—யது என்பவனுடைய சந்ததியான்.
ராகவன்—ரகு என்பவனுடைய சந்ததியான்.
திரௌபதர்—திரௌபதியுடைய பிள்ளைகள். (பாரதம்.படை. ௫.)
பௌரவர்—பூரு என்பவனுடைய சந்ததியார்.
ஆணவம்—அணுசம்பந்தமுடையது. அணு—ஆன்மா.
பார்த்தன்—பிருதையின்மகன். பிருதை—குந்தி.

இங்கே அ ஆவாகவும், இ ஐயாகவும், உ ஔவாகவும் சந்தி பெற்றமை காண்க. தீர்க்கசந்தி விருத்திசந்திகளை வேறுநூலிற் காண்க.

### இகார விகுதி.

உ-ம்.

தாசரதி—தசரதன்மகன்.
சௌரி—சூரன்மகன்.
மாருதி—மருத்தின்பிள்ளை.
காவேரி—கவேரன்மகள். (மணிமே.)
இராவணி—இராவணன்மகன். (பார.வேத்.)
ஆனிலி—அனிலன்மகன். (பார.)
பாஞ்சாலி—பஞ்சாலராசன்மகள். (பார)
வைதேகி—விதேகராசன்மகள். (இராமா.)

### ஏய விகுதி.

காங்கேயன்—கங்கைமகன். கார்த்திகேயன்—கிருத்திகைமகன்.
வைநதேயன்—விநதைமகன். காத்திரவேயர்—கத்திருவின்மக்கள். (பார)
மாருதேயன்—மருத்தின்பிள்ளை. ஆதிதேயர்—விருந்தையுபசரிப். (பாரத.)

### ய விகுதி.

தைத்தியன்—திதியின்பிள்ளை. ஆதித்தியன் —அதிதியின்பிள்ளை.
சைத்தியன்—சேதிராசன். (சிசுபால.) பௌலத்தியன்—புலத்தியன்சந்ததி.

### ஆயன் விகுதி.

நாளாயனி—நளன்மகள். (பார. திரௌ. சுந.) தாக்ஷாயனி—தக்கன்மகள் (திரு.

### ஈய விகுதி.

பிராத்திரீயன்—சகோதரன்பிள்ளை. திரௌபதியர்—திரௌபதிமக்கள். (பாரத.

### இக விகுதி.

இரைவதிகன்—இரேவதிபிள்ளை. நையாயிகன்—நியாயமறிந்தோன்.
வைதிகன்—வேதத்திற்குரியோன். பௌராணிகன்—புராணமறிந்தோன்.

சில பெயர்கள் விருத்திமாத்திரம் அடைதலினாலும், சில பெயர்கள் விகுதிமாத்திரம் அடைதலினாலும் தத்திதாந்தப்பொருளைத் தரும்.

உ-ம். வாசுதேவன்—வசுதேவன்மகன். கௌசிகன்—குசிகசந்ததியான்.
கைகயர்—கேகயநகரத்தார். (இரா) கார்த்தவீரியன்—கிருதவீரியன்மகன்.
சனகி—சனகன்மகள். அம்பிகேயன்—அம்பிகைமகன். (பாரத. திரௌ)

சில பெயர்கள் இருமொழியும் விருத்தியாகித் தத்திதாந்தமாதலும் உண்டு.

உ-ம். அ + சுசி = ஆசௌசம்—சுசியில்லாமை.
சர்வ + பூமி = சார்வபௌமன்—சர்வபூமியையுமுடையோன்.
அதி + பூதம் = ஆதிபௌதிகம்—பூதத்தால்வருவது.
அதி + தேவ = ஆதிதைவிகம்—தெய்வத்தால்வருவது.

மான், வான், ஆலு முதலிய விகுதிகள் உடைமைப்பொருளைக்காட்டும்.

உ-ம். வித்வான்—வித்தையுடையோன். தனவான்—செல்வன்.
ஸ்ரீமான்—ஸ்ரீயையுடையோன். தீமான்—புத்தியுடையோன்.
தயாலு—தயையுடையோன். நித்திராலு—நித்திரைகாரன் (பார.)

மயம் என்னும் விகுதி அதனால் நிறைவு அதன்ரூபம் என்னும் பொருள்களில் வரும்.

உ-ம். சிவமயம். அன்னமயம். பிராணமயம்.
பொன்மயம். சின்மயம். தன்மயம். (திருவி-திருநகரங்கள்-சஉ.)

---

இயம் என்னும் விகுதி உரியது என்னும் பொருளில் வரும்.

உ-ம். சுவகியம்—தனக்குரியது. பரகியம்—பிறனுக்குரியது.(வள்.பிற.)
இராசகியம்—இராசாவுக்குரியது. வேத்திரகியம்—பிரம்புக்குரியது.(பார

---

துவம், தா, இமா, யம் முதலிய விகுதிகள் தன்மைப்பொருளைக் காட்டும்.

உ-ம். பதித்துவம்—பதியின்தன்மை. பாசத்துவம்—பாசத்தன்மை.
விமலதை—மலமின்மை.(சித்.சு.) வீரதை—வீரன்தன்மை. (இரா.)
அணிமா—அணுவின்றன்மை. இலகிமா—இலகுத்தன்மை.
வீரியம்—வீரத்தன்மை. சத்யம்—உள்ளதன்றன்மை.

---

## அடுக்குமொழி.

கடு. அடுக்குமொழிகள் வடமொழியிலே தோறும் என்னும் இடப்பன்மை, அதன் சமீபம், நிந்தை, தொழின்மாறுதல், அதட்டல், ஒப்பு, ஆபாசமின்மை முதலிய பொருள்களிலே வரல்போலத் தமிழிலும் வழங்கப்படும்.

உ-ம். ஊரூர்கொண்ட—ஊர்தோறுங் கொண்ட. (திருமுரு.)
திசை திசை—திசைதோறும். (கலித்தொகை.)
வீட்டுக்கு மேலே மேலே—அதன் சமீபம்.
மலம் மலம்—நிந்தை.
"முகமுகநோக்கி,,—தொழின்மாறுதல். (பார. சூது. கசுஅ.)
"தோளுந்தோளும்போர்செய,,—(தொழில் ஒன்றுக்கொன்றுமாறி)(பா.)
கள்ள! கள்ள!—அதட்டல்.
வித்வான்வித்வான்—வித்துவானையொத்தவன்.
சுகஞ்சுகமாய்ப்பார்—ஆபாசமின்மை.

---

## அடுக்கிடுக்கு.

கசு. அடுக்குமொழிகளுள்ளே சில மூன்மொழி விகாரமடைந்து மிகுதிமுதலிய பொருளைக் காட்டித் தமிழிலும் வரும்.

உ-ம். பணைத்த பணைத்த=பண்ணப்பணைத்த-மிகப்பெருத்த. (நாலடி.அறி.க)
பைய பைய=பைபய—மிகப்பைய. (கலித்தொகை. மருத. உ௦.)
அணித்து அணித்து=அண்ணணித்து—மிகவணித்து. (கலித்தொகை.)
கரிய கரிய=கன்னங்கரிய—மிகக்கரிய. (பார. நிவாத. க௦சு.)
தனி தனி=தன்னந்தனி—மிகத்தனி. (கந்தபுரா. அயிராணி. கசு.)

---

## ஐயீறு.

கூஎ. ஆரியத்திலே இடப்பெயர் காலப்பெயர் முதலியவற்றைக் குறிக்கும் சுட்டுச் சொற்கள் "ய்" முதலிய விகுதிகளைச் சேர்ந்து உள்ள உரிய எனப் பொருள்படுதல்போலத் தமிழிலும் அச்சொற்கள் ஐ என்பதனோடு அங்ஙனமாகும்.

உ-ம். ஈண்டைமாநிதி. (கந்தபுரா. தெய்.) இப்பொழுதைநிலை. (பரிமேல.)
மேலைவானவர். ( ,, ,, ) பொழுதைநிகழ்ச்சி, ( ,, )

---

# பெயர்ச்சொற்பாகுபாடு.

கூஅ. பலவித பகுதிச்சொற்கள் இ, சி, தி முதலிய விகுதிகளோடு சேர்ந்து வினைமுதற்பொருள் செயப்படுபொருண் முதலிய பொருள்களை ஆண்பால் பெண்பால் ஒன்றன்பால் முதலிய பால்களிலே ஏற்றபடி உணர்த்தி வரும்.

---

## இகர விகுதி.

உ-ம். வா-வாரி—வருவாய். (கந்த. தெய்.) போற்றி—போற்றப்படுவது.(கோயி
குறு-குற்றி—குறுமையது. காரி—கறுப்புடையது, கரியன்.
ஊர்-ஊரி—குருவிச்சை.(கல்லா.) செங்காரி—சிவப்புங்கறுப்பும்.(கலி)
கால்-காலி—காலுடையவன். வெற்றி—தூர்க்கை.
கொட்டு-கொட்டி—தாளம். வெள்ளி—வெண்மையுடையது.

### சி.

ஆள்-ஆட்சி—ஆளப்படுவது. வலை-வலைச்சி—வலையன்மனைவி.
பூண்-பூட்சி—பூணப்படுவது. முலை-முலைச்சி.(இராமா. இட்.)
கடை-கடைசி—இறுதியானது. வாய்-வாய்ச்சி—வாயுடையவள்.

தி.

உறு-உறுதி—கல்வி. விடுதி—விடுதலுடையது.
செய்-செய்தி—செயலது. புகுதி—நிகழ்ந்தது. (கந்தபு.சிங். உ0.)
கெடு-கெடுதி—கேடுடையது. அறுதி—நிச்சயம். (நல். பாரத. கஙூ.)
பெறு-பெறுதி—பேறு. ஊர்தி—ஊரப்படுவது. (புறநா.)

பி.

நம்பு-நம்பி—விரும்பப்படுவோன். எம்பி—தம்பி.

றி.

தென்-தென்றி—தென்றல். வன்றி—வன்மையுடையது, பன்றி.
து-துற்றி—உண்பது. தின்றி—தின்பது.

ணி.

புறம்-புறணி—முல்லைநிலம். (சூளா.) அகணி—மருதநிலம்.
குறு-குறுணி—நுளாக்கியது. பாணி— குடிக்கப்படுவது.

வி.

கேள்-கேள்வி—காது. கல்வி—கற்கப்படுவது.
வேள்-வேள்வி—யாகம். செல்வி—செல்கையுடையாள்.

---

## உகர விகுதி.

ஙக. உகரத்தோடும், உகரம் ஊகாரமாய் அளபெடுத்தலோடும், கு, சு, டு, து, பு, று, என்னும் விகுதிகளோடும் முன்னைய பொருள்களிலே பலபெயர்கள் உண்டாகும்.

உ

உ - ம், மின்-மின்னு—ஒளியுடையது. கொளு—கருத்து. (புறப்பொ.)
கொல்-கொல்லு—கொல்லன். தச்சு-தச்சன். (இலக்கணக்கொத்து.)
முருகு+உ=முருகு—கந்தன். ஆலு—ஆலமர்கடவுள் (கந்தரல.)
மரு-மருஉ—மருவினது. ஒரூஉ—ஒரூஉத்தொடை. (காரிகை.)
தழு-தழூஉ—குரவைக்கூத்து. பரூஉ—பருமையது. (பத்துப்பாட்டு.)

கு.

தீமை-தீங்கு—தீமையுடையது. நன்கு —நல்லது. (வள்.)
போ-போக்கு—குற்றம். (தொல்.) செதுக்கு—வாடல். (பத்துப்.)
படம்-படங்கு—கூடாரம். கடுகு—கார்ப்புடையது.

சு.

அமை-அமைச்சு—உழையிருப்போன். விழைச்சு—புணர்ச்சி. (விரும்பப்படுவ.)
முழை-முழைஞ்சு—முழையுடையது. வரிச்சு—வரியுடையது. (இரா. சித். சச)

டு.

யா-யாண்டு—எவ்விடம். ஆண்டு—அவ்விடம்.
பேண்-பெண்டு—விரும்பப்படுபவள். விண்டு—விண்ணிற்செல்வது.

து

செம்மை-சேது—சிவந்தது. இருமை-இருந்து—கரி. (இராமா.சூர்.கஎ.)
கொளு-கொளுத்து—மூட்டு. அளி-அளிது—அளிக்கப்படுவது. (புறநா.)
எளிமை-எளிது—எளியது. வலம்-வலது—வலப்புறத்தது.(நல்.பார.யயா)
வெம்மை-வேது—வெம்மையது. பொய்-பொய்து—துளையுடையது.(இராமா.)

பு.

இருமை-இரும்பு—கருமையுடையது. செம்பு—செம்மையுடையது.
கழி-கழிப்பு—குற்றம். துப்பு—உண்ணப்படுவது.
அடு-அடுப்பு—அடுத்தலுடையது. மாண்பு—மாட்சியுடையாள். (வள்.)
குறுமை-குறும்பு—குற்றம். தொழும்பு—ஏவற்காரர்.

று.

களி-களிறு—களியுடையது. வெளிறு—வெண்மையுடையது.
ஏ-ஏறு—உயர்ச்சியுடையது. படிறு—வஞ்சகம்.

---

வு.

௪௦. சில பகுதிகள் அகரச்சாரியை பெற்றும் சில பெறாதும் வுகர விகுதியோடு சேர்ந்து சிலபெயர்களை உண்டாக்கும்.

உ-ம். செல்-செல்வு—வழி. நடவு—நாறு. (இரகுவமி.நாடு.)
உறு-உறவு—சுற்றம். எழவு—எழுச்சி. (திருவிளையா.)
சார்-சார்வு—புகலிடம். வாழ்வு—செல்வம். (சித்தியார்.உ.)
அடை-அடைவு—முறை. வேள்வு—யாகம். (சிந்தா. நாமக. ௬௧.)
கன்மேய்வு—புறாப்பறவை. செல்-செல்வு—கொண்டாடல்.(திருக்)

---

௪௧. சில பகுதிகள் ஐ, கை, சை, தை முதலிய விகுதிகளோடு சேர்ந்து அங்ஙனம் பெயர்களை உண்டாக்கும்.

ஐ.

உ-ம். வெள்-வெள்ளை—பலதேவன். பச்சை—பசுமையுடையது.
சில்-சில்லை—கீழ்மகன்.(கல்லா.௫௨.) ஒழுகை—வண்டில்.(புறநா.)
தட்டு-தட்டை—கிளிகடிகருவி. சிவலை—சிவப்புடையது. (கலித்.)
கொங்கு-கொங்கை—முலை. சுருங்கை—சுருங்கியவாயில்.

கை.

நம்பு-நங்கை—விரும்பப்படுபவள்.
கவி-கவிகை—குடை.
இரு-இருக்கை—ஊர்.
வாழ்-வாழ்க்கை—செல்வம்.
செயற்கை—செயலுடையது.
ஈகை—பொன், ஈயப்படுவது.
உசாக்கை—நிமித்திகன்.
மயற்கை—மயலுடையது. (சிந்.பது.உஉ௮)

சை.

குடி-குடிசை—குடியையுடையது.
மறை-மறைசை—வேதசம்பந்தமுடை.
பரி-பரிசை—சூழ்தலுடையது.
பொலிசை—பொலிதலுடையது. (சிந்.)
வரிசை—நிரையுடையது.
பழிசை-பழித்தலுடையது. (கலி.முல்)

தை.

இருமை-இருந்தை—கரி.
தொழு-தொழுத்தை—தொழுவோன். (நால்.)
குழவு-குழந்தை—இளமையுடையது.
மடந்தை—அறியாமையுடையவள்.
சித்தை—நீக்கப்படுவோன். (கலி.)
உடன்—உடந்தை. (நல்.பார.பிர.)

பை.

பற-பறப்பை—பறவை. (தணி.)
கருமை-கருப்பை—காரெலி.
இடும்பை—வருத்தமுடையது.
குடம்பை—முட்டை. (வள். நிலை.)

மை.

அடி-அடிமை—அடியவன்.
சிறு-சிறுமை—சிறியவன்.
குடிமை—குடியிற்பிறந்தவன். (வள்.மடி.)
பெருமை—பெரியோன். (வள்.பெருமை.)

வை.

பூ-பூவை—அழகுடையவள். (பார.)
பார்-பார்வை—கண்.
அற-அறவை—துணையிலி.
அறுவை—புடைவை.
போர்வை—போர்க்கப்படுவது.
கறவை—கறத்தலையுடையது. (பத்து.)

றை.

பின்-பின்றை—பின்னாள்.
இ-இன்றை—இந்நாள்.
மூன்று-மூற்றை. (கந்தபு.மகே.கக௨.)
அன்றை—அந்நாள்.
ஏற்றை—ஏறு. (சிந். கோவிந். உச.)
ஒற்றை—தனிமை.

---

## பகுதி விகாரம்.

௩௨. கு, டு, று என்னும் இறுதியையுடைய சில குறிலிணைப் பகுதிகளும், வேறு சில பகுதிகளும் நீளுதலாகிய விகாரத்தால் தொழிற்பெயர் முதலிய பொருள்களுடையனவாகும்.

உ-ம். பகு-பாகு—பகுத்தல்.
குறு-கூறு—குறுத்தலுடையது.
படு-பாடு—படுதலையுடையது.
இடு-ஈடு—இடப்படுவது.

மறு-மாறு—பகைவன். (சிலப்.) கெடு-கேடு—கேடுதருவது.(வள்.நட்.)
கொள்-கோள்—கொள்கை. அடு-ஆடு—சமைத்தல்.(புறநா.கசஉ.)

---

இவற்றுள்ளே சில இறுதி இரட்டித்தலினாலும், சில இறுதி இரட்டித்தலோடு அம் பெறுதலினாலும் வேறு பொருளாகும்.

உ-ம். பகு-பாக்கம்—ஊர், பகுக்கப்பட்டது. வெறு-வெற்றம்—வெற்றி.
உறு-ஊற்று—ஊறுதலையுடையது. அற்றம்—சோர்வு, இறுதி.
மறு-மற்று—மாற்று-எதிர்ச்செயல். மாற்றம்—எதிர்மொழி. (வள்.)
குறு-குற்று—குற்றம். கூற்று—கூறுசெய்வோன்.

---

இன்னும் இவற்றுள்ளே சில இரண்டாக இணைந்து இரண்டும் நீண்டு வேறு பொருள் பயத்தலும் உண்டு.

உ-ம். பகு-படு—பாகுபாடு. குறு-படு—கூறுபாடு. (பிரயோகவி.)
உறு-படு—ஊறுபாடு.(வள்.ம.ரு) மறு-படு—மாறுபாடு. (கல்லாட.கஅ.)
இடு-படு—ஈடுபாடு. தறு-மறு—தாறுமாறு - அநீதி.
கொள்-படு—கோட்பாடு. விடு-பெறு—வீடுபேறு-மோக்ஷம்.

---

சங. இந்தப் பாடு, ஈடு, ஊறு, ஆறு கோள் முதலியன சில சொற்களின் பின்னின்று சில பெயர்களை உண்டாக்கும்.

பாடு.

உ-ம். இலம்பாடு—வறுமை. தொடர்ப்பாடு-தொடர்ச்சிகள்.(வள்-அதி-கரு.)
அடிப்பாடு—வழி. ஏதப்பாடு—குற்றமுண்டாதல்.( ,, ,, சஎ.)
புறப்பாடு—பயணம். இடர்ப்பாடு—இடர்ப்படுதல். ( ,, ,, கூக.)
ஒருப்பாடு—சம்மதி. திறப்பாடு—கூறுபடுதல். ( ,, ,, கூரு.)
மேம்பாடு—பெருமை. தலைப்பாடு—நேர்மை. (புறநா.எஎ.)
பிழைப்பாடு—பிழைபடல். (நன்.) கொடும்பாடு—நேரல்லாதது.(திரி)

ஈடு.

தலைக்கீடு—வியாசம். (திருக்.) இடையீடு—இடையிடுவது.(பரிமே.)
மண்ணீடு—திண்ணை. (சிலப்.) உடம்புக்கீடு—சட்டை. (சிலப்.)
குறியீடு—குறியிடல். (பிர.) ஏதீடு—காரணமிடல். (பொருளதி.)
பங்கீடு—பகுத்தல். (திவா.) முன்னீடு—முதன்மை.
உள்ளீடு—வைரம். அடியீடு—தொடக்கம்.

ஊறு.

இடையூறு—தீங்கு. எயிற்றூறு—பற்குறி. (கந்.தெய்வ.)
வல்லூறு—ஒருபறவை. கண்ணூறு—கண்ணுற்றது.

## ஆறு.

கையாறு—துன்பம். அழுக்காறு—பொறாமை.
முட்டாறு—வறுமை. (நால.) இட்டாறு—லோபம். (நாலடி.௩௰.)

## கோள்.

மீக்கோள்—போர்வை. உட்கோள்—கருத்து.(சிலப்.இ.)
மேற்கோள்—உதாரணம்.(பிரயோ.) கார்கோள்—கடல். (காராற்கொ.)
ஆகோள்—நிரைமீட்சி. (தொல்.) கால்கோள்—தொடக்கம்.(கலித்.)
அதர்கோள்—வழிப்பறித்தல். வியங்கோள்—ஏவற்பாடு.
கடைக்கோள்—இழிவு. ஊர்கோள்—வட்டமாகப்பரப்பது.

## ஏடு, கேடு

பாலேடு—வெண்ணெய். வினைக்கேடு—தாமதம். (கலித்தொகை.)

## தகு, தகை—சிறப்பு, தடுத்தல்.

தக்கு— தக்கார்—பெரியார். தாக்கு—தகுதியுடையது, தடுப்பு, அடி.(கந்த
தக்கது—சிறந்தது. தாக்கம்— ,, ,,
வளத்தக்காள். (வள்.) கைத்தாக்கு—கைக்கனம், கையடி.
தாக்காட்டல்—தடுத்தல். தாக்கணங்கு—சிறந்தபெண்.

---

௪௪. இன்னும் இந்தப் பகு, படு முதலிய பகுதிகள் விகாரமடையாது ஐ, அல், அம் முதலிய விகுதிகளோடு சேர்ந்து நின்றும் மேற்சொல்லிய வினைமுதற்பொருள், செயப்படுபொருண் முதலிய பொருள்களையுடைய பெயர்களை ஒருமைப்பால்களிலே உண்டாக்கும்.

## ஐ விகுதி.

உ-ம். பகு-பகை—பகைத்தவன். படு-படை—படுத்தலையுடையது.
உறு-உறை—உறப்படுவது. அறு-அறை—அற்றவன்.
அடு-அடை—அடுத்தது. எடு-எடை—எடுக்கப்படுவது.
குறு-குறை—குறுமையுடையது. இடு-இடை—இடப்படுவது.

## அல் விகுதி.

உறு-உறல்—பொருந்தல். அறு-அறல்.
அடு-அடல்—போர்.(கந்த.தெய்.) படு-படல்.
தொடு-தொடல்—தொடுதல். சுடு-சுடல்.
குறு-குறள்-குறுமையுடையது. பகு-பகல். (வள். இகல்.)

## அம் விகுதி.

மறு-மறம்—தறுகண்மை. (வள்.) அடு-அடம்—தீங்கு.
இடு-இடம்—திரவியம்.(இடப்படுவது.) வறு-வறம்—வறுமை. (தணி.)

பு, இ.

| பகுப்பு. | அறுப்பு. | மறுப்பு. | இடுப்பு. |
|---|---|---|---|
| அடு-அடி—அடுத்தது. | | மடு-மடி—ஊக்கமில்லோன். (நன்.) | |

---

௯௫. இத்தப் பகை, உறை, அடை, படை, அறை, தகை முதலியன சில சொற்களின் பின்னின்று பல பெயர்களை உண்டாக்கும்.

பகை.

உ-ம். சூர்ப்பகை—முருகக்கடவுள். பனிப்பகை—சூரியன்.
வரைப்பகை—இந்திரன். மட்பகை—மண்பிரிக்குங்கருவி. (நன்.)

உறை.

மெய்யுறை—சட்டை. கையுறை—கைக்காணிக்கை. (கலித்தொ.)
அடியுறை—பாதகாணிக்கை. கண்ணுறை—மேலீடு. (புறநா.)
உள்ளுறை—ஒருவமை. வாயுறை—கவளம். (திருமூலமந்.)

அடை.

கையடை—அடைக்கலம். பாசடை—பாசி. (கல்லா. அ௬.)
தண்ணடை—மருதநிலம். தேம்+அத்து=தேத்தடை—தேன்கூடு.
ஓம்பு-ஓம்படை—பாதுகாப்பு. (சிக்.) சுமையடை—சும்மாடு.

படை.

கண்படை—நித்திரை. இலம்படை—வறுமை. (கந்தபு. மூவா)
வெளிப்படை—பிரகாசமானது. சேட்படை—தூரம். (கந். சிங்க. ௧௬௪.)
குளறுபடை—குளறுதலுடையது. ஓம்படை—சம்மதி. (சிந்த.)
ஆற்றுப்படை—வழிப்படுத்தலுடையது. கற்படை—கற்படுத்தலுடையது.

அறை.

வரையறை—நிச்சயம். (திருவி.) பொறியறை—திருவிலி. (திரிகடு-௪௫).
கண்ணறை—கண்ணிலி. (மணிமே) கோலறை—கோலாற்பிரித்தநிலம். (வாதவூ
சில்லறை—அற்பஅளவு. வைகறை—காலை. (தொல்கா.)

குறை.

பனைக்குறை—பனைத்துண்டு. விதுக்குறை—பாதிச்சந்திரன். (தணிகைப்பு)

எடை.

அளபெடை—அளபெடுக்கப்படுவது. துயிலெடை—துயிலெழுப்பும்பாட்டு.

இடை.

நெல்லிடை—நெல்விடத்தக்கவிடம். வில்லிடை—வில்விடத்தக்கஇடம். (பார

தகை.

பெருந்தகை—பெரியோன். (கந்தபு.) நெடுந்தகை—பெரியோன். (கலித்.)

---

## அல் லீறு.

சசு. அல்லீருபுள்ள சில சொற்கள் ஐ என்பதனேடு சிலவற்றை உண்டாக்கும்.

உ-ம். தொடலை—தொடுத்தலுடையது. அடலை—சாம்பல்.
கடலை —சுடுகாடு. அலவலை—புலம்புவோன். (திரிகடு)
குறளை —புறங்கூறல். வண்டலை—வண்டற்பாவை. (வாண)

---

சஎ. உறல் என்பது சேரும்போது சில பெயர்களினீறு கெடும்.

உ-ம். காமம்-காமுறல்—விரும்பல். ஏமம்-ஏமுறல்—மயங்கல்.
அச்சம்-அச்சுறல்—பயப்படல். ஐயம்-ஐயுறல்—சந்தேகித்தல். (இரா.)

---

## குற்றுகரவீறு.

சஅ. நெடிற்றொடர்க் குற்றுகர வீற்றையும், உயிர்த்தொடர்க் குற்றுகர வீற்றையுமுடைய சில வினைப்பகுதிகள் வல்லொற்றிரட்டியும், மென்றொடர்க்குற்றுகரவீற்றுச் சில வினைப்பகுதிகள் மெல்லொற்று வல்லொற்ருகியுஞ் சில பெயர்களை உண்டாக்கும்.

### நெடிற்றொடர்.

உ-ம். ஆடு-ஆட்டு—கூத்து. பாடு-பாட்டு—கவி. (பாடப்படுவது.)
பேசு-பேச்சு—பேசப்படுவது. சூடு-சூட்டு—சூடப்பட்டது. (பத்து.)
ஏசு-ஏச்சு—நிந்தை. கூடு-கூட்டு. (சிங்.கார்.உகூச.)
ஓது-ஓத்து—வேதம். (வள்-ஒழு.) ஆறு-ஆற்று—உதவி. (வள்.)

### உயிர்த்தொடர்.

கருது-கருத்து—கருதப்படுவது. பெருகு-பெருக்கு—வெள்ளம்.
கருகு-கருக்கு—கருகுதலுடையது. எழுது-எழுத்து—எழுதப்படுவது.
திருகு-திருக்கு—மாறுபாடு. முறுகு-முறுக்கு—முறுகுதலுடையது.
அணுகு-அணுக்கு—சமீபம். இடுகு-இடுக்கு—சுருங்கியவழி. (இரா.)

### மென்றொடர்.

முடங்கு-முடக்கு—முடங்கல். (தணி.) மடங்கு-மடக்கு—யமகம்.
விளங்கு-விளக்கு—தீபம். வழங்கு-வழக்கு—வழக்கம்.
மயங்கு-மயக்கு—கலக்கம். முழங்கு-முழக்கு—முழக்கம்.
தூங்கு-தூக்கு—உறி. ஊன்று-ஊற்று—பற்றுக்கோடு. (வள்.)

---

## அம்பெறல்.

ருக. இவைகளுள்ளே சில இறுதியில் அம்பெறுதலுமுண்டு.

உ-ம். ஆடு—ஆட்டம். பெருகு—பெருக்கம் - செல்வம்.
கூடு—கூட்டம். இடுகு—இடுக்கம் - லோபம்.
வழங்கு—வழக்கம். விளங்கு—விளக்கம் - தீபம்.
முழங்கு—முழக்கம். மயங்கு—மயக்கம் - கலங்கல்.

ருo. பாட்டு, ஆட்டு என்பன பின்னின்று சில பெயர்களையுண்டாக்கும்.

## பாட்டு.

உ-ம். அகப்பாட்டு—அகத்திற்படுதலையுடைய நூல். புறப்பாட்டு.
குறும்பாட்டு—குறுமைபடுதலையுடையது. நெடும்பாட்டு.

## ஆட்டு.

கள்ளாட்டு—தவறணை. (ஆசார.) குறையாட்டு—கொள்ளை. (தணி. நாடு)
வெறியாட்டு—சந்நதம். (கந்தபு.) உண்டாட்டு—கள்ளுண்டாடல்.
சீராட்டு—நற்செயல். (சேதுபுரா.) களியாட்டு—கள்ளுண்ணல்.

## அர்.

ருக. சில குற்றியலுகரவீறு அர் பெறுதலும் அதன்மேல் அ, வு என்பன பெறுதலும் உண்டு.

உ-ம். பாங்கு—பாங்கர். முடுக்கு—முடுக்கர்.
தப்பு—தப்பரவு - சுத்தம். ஒப்பு—ஒப்பரவு.
வாட்டு—வாட்டரவு. தோற்று—தோற்றரவு. (மணிமே.)
தேற்று—தேற்றரவு. கூட்டு—கூட்டரவு.

ருஉ. அல், ஆல் என்னும் விகுதிகளைப் பெற்றுச் சில பெயர் உண்டாகும்.

## அல்.

உ-ம். இளமை—இளவல்-இளையோன். கறுவல்—கரியன், கரியது.
வண்மை—வள்ளல்-கொடையாளி. நெடுவல்—உன்னதமுள்ளோன்.
ஏந்து—ஏந்தல்-ஏந்தப்படுவோன். வற்றல்—வற்றுதலையுடையது.
செம்மை—செம்மல்-தலைவன். செத்தல்—குப்பை. (ஆசாரக்கோ.)
பை—பையல்-சிறுவன். தையல்—அணியுடையவள்.
நெடுமை—நெடுங்கழுத்தல்-ஒட்டகம். காதல்—பாலன். (இராமா. காட்.)

## ஆல்.

௫௩. சில முற்றுகரவிறுகள் ஆல் என்பதனோடு சேர்ந்து சில பெயர்களை உண்டாக்கும்.

உ-ம். ஒருவு—ஓரால் - விடுதல். கழால்—கழுவுதல்.
குரு—குரால்- புகைநிறத்தது.(கலி.) உழால்—உழுதல். (தணி. வள்.)
அழு—அழால் - அழுதல். எழால்—யாழினெழுமோசை.(கந்
தழுவு—தழால்-தழுவல்.(வள்.சுற்.) முழால்—தழுவல். (தணி. வள்.)

---

௫௪. இடப்பெயர்களாகிய தலை, கண், வாய், இல், உள், உளி முதலிய விகுதிகளைப் பெற்றுச் சில பெயர்கள் உண்டாகும்.

### தலை.

ஒருதலை—நிச்சயம். (வள்ளு.) பலதலை—நிச்சயமின்மை.(பரிமே.)
மறுதலை—மறுப்பு. (ஏலாதி.) விடுதலை—ஓய்வு.
தறுதலை—வன்கண்ணன். இளந்தலை—மெலிவு.
கயர்தலை—யானைக்கன்று. அறுதலை—அறவு. (சிந்தாமணி.)

### கண்.

கடுங்கண்—கொடுமை.(கல்லா.அ௩) தறுகண்—அஞ்சத்தக்கனவற்றிற்கு
வன்கண்—தறுகண். (வள்.) இடுக்கண்—துன்பம். [மஞ்சாமை.
மருங்கண்—மருங்கு. (திருக்.௫0.) களைகண்—துயர்களைவோன்.(தணி.
நெடுங்கண்—நீளம்.(கர்.சூ.௯௮௭.) புன்கண்—துன்பம்.
அங்கண்—அழகியது. இன்கண்—இன்பம்.(வள்.பிரிவாற்)

### வாய்.

எழுவாய்—ஆதி.(எழுதலுடையது.) தொடுவாய்—குறளைவார்த்தை.
இறுவாய்—இறுதியானது.(தொல்.) கழுவாய்—பிராயச்சித்தம்.(புறநா
வருவாய்—வருபொருள்.(திரிகடு.௨0.) அறுவாய்—குறைவு. (வள்.அதி.)

---

## இல்.

சில பகுதி விகாரமின்றியும், சில பகுதி விகாரமுற்றும் இல் என்னும் விகுதிபெற்றுப் பெயராகும்.

உ-ம். எழு-எழில்—எழுச்சி.(வள்.கல்.) தொழு-தொழில்—ஏவல்.(மதுரைக்.)
தொய்-தொய்யில்—உழுதநிலம். குறில்—குறுமையுடையது,
குடில்—வளைவுடையது. வாயில்—வாயுடையது.

### இகாரம்.

அடு-அட்டில்—அடுக்களை.
முன்-முன்றில்—முற்றம்.
துஞ்சு-துச்சில்—ஒதுக்கிடம்.
பொது-பொதியில்—சபை. (மணிமே.)
புகு-புக்கில்—வீடு. (புகப்படுவது.)
எஞ்சு-எச்சில்—உச்சிட்டம்.
மிஞ்சு-மிச்சில்— ,, ,,
வெம்-வெய்யில் —வெம்மையுடையது.

### உள்.

கட-கடவுள்—கடந்தோன்.
உறை-உறையுள்—உறைவிடம்.
வேய்-வேயுள்—வேயப்படும்வீடு.
பை-பையுள்—துன்பம்.
இயவுள்—தெய்வம்.
விளையுள்—விளைவிப்போர்.(வள்.அதி.எசு)
அகலுள்—தெரு. (சிலப். நாடு.)
செய்யுள்—செய்யப்படுவது, வயல், கவி.

### உளி.

விதி-விதியுளி—விவாகம்.
மரபு-மரபுளி—மரபுடையது. (பத்.)
வகை-வகையுளி—பிரிவுடையது.
வல்லுளி—கரடி. (வலியுடையது.)
இயல்புளி—விதி. (கந்த. தெய். சு.)
முறையுளி—செயக்கடவது.(பெரும்பா.)

### ஆங்கு.

பட்டாங்கு—உண்மை. (பாரத.பழம்.)
வாளாங்கு—மவுனம் (தணி.கள.)
பொல்லாங்கு—தீங்கு.
ஓராங்கு—ஒருபடி. (கலித்தொ.)
இன்னாங்கு—இடுக்கண்.(நாலடி.)
பெட்டாங்கு—விருப்பு. (திரிகடு.)
பாசாங்கு—கபடம்.
தக்காங்கு—நடுநிலை. (வள்ளு.)

---

௫௫. சில பகுதிகள் ஆடல், விடல், வரல், தரல் முதலிய சொற்களோடு சேர்ந்து ஒரு பெயராய் வரும்.

### ஆடு; ஆடல்—செய்தல்.

உ-ம். மாறுடல்—பகைத்தல்.
விசும்பாடல்—பறத்தல்.(கலி.)
பந்தாடல்—சுழற்றல். (கல்வ.)
கொண்டாடல்—புகழ்தல்.
வட்டாடல்—உருட்டல். (தணி. கள.)
மையாடல்—ஓதுதல். (சிந்தா.முத்.)
கொண்டலாடல்—சொரிதல். (திருவா.)
ஊடாடல்—பயிலல்.(இரா.மார்.எகூ)

### விடு, விடல்.

கைவிடல்—நீக்கல்.
வாய்விடல்—பேசுதல்.
தளைவிடல்—மலர்தல். (கலி. செய். க.)
அசாவிடல்—சுவாத்தியம்.( ,, ,, உ0.)

### வா, வரல்.

தைவரல்—தடவல்.
பருவரல்—துன்பம்.
துயல்வரல்—அசைதல்.
எளிவரல்—பணிதல். (கலித்.)

தா, தரல்.

உழிதரல்—திரிதல். போதரல்—கொண்டுபோதல். (தணி: நாடு.)
மறிதரல்—மீளுதல். புறந்தரல்—காத்தல். (வள். விருந். பரிமே.)

உயிர்த்தல்—விடுதல்.

பொறையுயிர்த்தல்—ஈனுதல். (தணி.) கருவுயிர்த்தல்—ஈனுதல். (பாரத.)
அயாவுயிர்த்தல்—சுகப்படல். (சித்தா.) கடியுயிர்த்தல்—பரிமளித்தல்.

---

௫௪. ஆள் என்னும் பகுதியோடு சேர்ந்த ஆளர், ஆண்மை என்பவைகள் பின்னின்று சில பெயர்களை உண்டாக்கும்.

ஆளர்.

உ-ம். அந்தணாளர்—முனிவர். பெருக்காளர்—வேளாளர். (பார. பாயி.)
காராளர்—உபகாரிகள். (திரிகடு) மூதாளர்—வயோதிகர். (கந்தபு. வள்.)

ஆண்மை.

சான்றாண்மை—பெருமை. (வள்.) பேராண்மை—அருஞ்செயல்.
ஊராண்மை—ஒப்புரவு. (நாலடி.) காராண்மை—உபகாரம். (திரிகடு.)

---

௫௫. என் என்னும் பகுதியோடு சேர்ந்த எனல், எனவு என்பவைகளோடு சேர்ந்து சில சொற்கள் வரும். அவை பெரும்பாலுங் குறிப்பாகப் பொருளை உணர்த்தும்.

எனல்.

ஆவெனல்—வாய்திறத்தல். இலையெனல்—மரணம். (வள். நிலையாமை.)
புல்லெனல்—மழுங்கல். வாவெனல்—அழைத்தல். (சேதுபு. கந்த.)
விண்ணெனல்—வெளியாதல். (தணி) தெற்றெனல்—தெளிதல். (வள். ஒற்று.)
கஃறெனல்—கறுத்தல். (தணி. க.) எற்றெனல்—இரங்கல். (வள். கூடா. கு.)

எனவு.

தண்ணெனவு—குளிர்ச்சி. வெச்செனவு—வெம்மை. (சேதுபு. கடவுள்.)
வெட்டெனவு—கடுஞ்சொல். மெத்தெனவு—மென்சொல். (நீதிவெண்பா.)

---

ஆத்தல்.

௫௬. ஆ என்னும் பகுதியினின்று தோன்றிய ஆத்தல், ஆப்பு என்பவைகள் இறுதி விகாரமடைந்த சில பெயர்க்குப் பின்னின்று சில பெயர்களை உண்டாக்கும்.

உ-ம். சோகம்-சோகாத்தல்—வருந்தல். இறுமாத்தல்—வீற்றிருக்கை. (தேவா)
ஏமம்-ஏமாத்தல்—மயக்கல். (நால.). அண்ணாத்தல்—தலைநிமிர்தல். (தணி.
மையல்-மையாத்தல்—மழுங்கல். அல்லாத்தல்—வருந்தல். (தணி.)
சிம்மம்-சிம்மாத்தல்—வீற்றிருத்த. செம்மாத்தல்—வீற்றிருத்தல். (கந்த.)

ஆப்பு

சோகாப்பு—வருத்தம். (வள்ளு.) இறுமாப்பு—தலையெடுப்பு.
பொச்சாப்பு—மறதி. (வள்ளு.) பொல்லாப்பு—தீங்கு.
விம்மாப்பு—பொருமல். (சிந்.கன.) வயாப்பு—துன்பம். (புறநா.)

---

௫௯. சில பொதுப்பெயர்கள் வெவ்வேறு அடைமொழியோடு சேர்ந்து வெவ்வேறு பெயராகும்.

மொழி.

முதுமொழி—பிரணவம். (கலித்.) நெடுமொழி—புகழ். (பாரத.)
குறுமொழி—நிந்தை. (கலித்.) குருமொழி—உபதேசம். (கல்லா. உ.)
மறுமொழி—உத்தரம். (சிந்தா.) திருமொழி—ஆகமம். (கலி.)

மா.

கைம்மா—யானை. பரிமா—குதிரை.
ஏம்மா—பன்றி. வயமா—சிங்கம்.

---

௬0. இன்னும் பண்படி, வினையடி முதலியவைகளினின்று பலவிதமாகப் பெயர்ச்சொற் பிறக்கும்.

உ-ம். செம்+வி—செவ்வி. கறு—கறள். (ளவொற்றுமை.)
செம்+வை—செவ்வை. சுடு-சுடர்—சூரியன். (ரவொற்.)
கூ+து-கூத்து, ஆரவாரமுடையது. வேட்டை—கொலையுடையது.
ஊண்-ஊட்டு—ஊட்டப்படுவது. முற்றூட்டு—சர்வபோகம். (திருக்)
காண்-காட்டு—மேற்கோள். வேண்டேட்டு—விரும்பிய உணவு.

---

# வினைச்சொற்பாகுபாடு.

௬௧. வினைச்சொற்கள் பெயர் வினையிடையுரியடிகளினின்றும், வடசொல்லடியினின்றும் பிறக்கும்.

## பெயரடி.

உ-ம். கனவு—கனவினன். (காஞ்.அங்.௬௭.) மறுதலை—"மறுதலைத்த" (காசி.)
புறக்கண்—புறக்கணித்தான். தேன்—"தேனிக்கும்" (தணி.பு.)
தலை—"தலைஇய" முதலான.(ஆசார.) அந்தம்—அந்தித்த. (கந்தபுரா.)

---

## வினையடி.

௬௨. வினைப்பகுதியினின்று பலவித விகாரத்தோடு எச்சங்களும் முற்றுக்களும் பிறக்கும்.

உ-ம். கட - கடத்து, கடத்தி, கடவி, கடக்க, கடத்த.
கடைஇ, கடாவி, கடப்ப, கடவ.
மற - மறப்பி, மறந்து, மறப்பித்து, மறக்க.
மறவி, (தணி.) மறப்ப.
சும - சுமப்பி, சுமந்து, சுமப்பித்து, சுமக்க.
சுமாய்-சுமப்பித்து, (சிந். முத்.)

---

அடி—அடித்து. அடிக்க. அடித்தான்.
கசி—கசிந்து. கசிய. கசிந்தான்.

---

## முற்றியலுகரம்.

௬௩. சில முற்றியலுகரவீறு இகரவீறாய் அளபெடுத்துச் செய்தென் வாய்பாட்டு வினையெச்சங்களாய்த் தன்வினை பிறவினைகளில் வரும்.

---

### தன்வினை.

தழுவு-தழீஇ—தழுவி. மருவு-மரீஇ—மருவி.
உருவு-உரீஇ—(சிந். நாம. ௨௭.) கழுவு-கழீஇ—கழுவி. (சிந். முத்.)

### பிறவினை.

படு-படீஇ—படுத்தி. (சிலப்.) உறு-உறீஇ—உறுத்தி. (தணிகை.)
எழு-எழீஇ—எழுப்பி. (தணிகை.) இரு-இரீஇ—இருத்தி. (தணி. நாடு.)

---

## ஐகாரவீறு.

௬௪. சில ஐகாரவீறும் அளபெடுத்துச் செய்து என்னும் வினையெச்சமாகும்.

உ-ம். அளை-அளைஇ—அளைந்து. (கள்.) தொகை—தொகைஇ.
தலை-தலைஇ—மழைபெய்து. குவை—குவைஇ.

---

௬௫. வெவ்வேறு பொருள்களையுடைய ஒரே ஈற்றுப்பகுதிகள் சில விகுதி முதலியவைகளோடு சேரும்போது உண்டாகுஞ் சந்தி விகாரபேதங்களினாலே அவ்வப்பொருளைக் காட்டும்.

உ-ம். அடு-அடுத்தல்—பொருத்தல். அடுத்து, அட்டினர். (கந். தெய்.)
அடுதல்—கொல்லல். அட்டும்—அழிகின்ற. (சிந்.இல.௧௩௮.)
படி-படித்தல்—வாசித்தல். படித்து, படித்தார்.
படிதல்—அடங்குதல். படிந்து, படிந்தார்.
விளி-விளிதல்—இறத்தல். விளிந்து, விளிந்தார்.
விளித்தல்—அழைத்தல். விளித்து, விளித்தார்.
வை-வைதல்—இகழ்தல். வைது, வைதார்.
வைத்தல்—இருத்துதல். வைத்து, வைத்தார்.

---

## தன்வினை, பிறவினை.

௬௬. சில தொழிற் பெயர்கள் தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாய் நின்று பகுதி விகுதி வேறுதலையும், சில முற்றுகள் தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாய்நிற்றலையும், தன்வினையாய்நின்ற சில பகுதிகள் விகாரத்தாற் பிறவினையாதலையும் பொருந்தும்.

உ-ம். இருத்து+அல்=இருத்தல்—இருத்துதல். இரு+தல்=இருத்தல்.
நடத்து+அல்=நடத்தல்—நடத்துதல். நட+தல்=நடத்தல்.
தோற்று—தோற்றினன். தேற்று—தேற்றினன்.
ஊட்டினன்—உண்டான். (இராம சுந். பிணி. ௬௬.)
நலி—நலிந்தான். நிலம்பூத்தான்—(பாரத. இருட்.)
உருகு—உருக்கினன். விளங்கு—விளக்கினன்.

---

## செய, செய்து.

௬௭. செய என்னும் வாய்பாட்டு வினையெச்சம் படு என்பதனோடு சேர்ந்து செயப்படுபொருளிலும், செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம் கொள் என்பதனோடு தற்செயலுணர்த்தலிலும் இடு, இரு என்பவற்றோடு சேர்ந்து துணிவுப்பொருளிலும் வரும்.

உ-ம். எனப்பட்டது. (வள். அற.) எனப்படுப. (தொல்கா. எழுத்தி.)
அடிக்கப்பட்டன. காணப்பட்டன.
செய்துகொண்டான். எழுதிக்கொண்டான்.
எழுந்திட்டான், வேண்டியிருப்பர். (வள். பழமை.)

## செய்யிய.

சுஅ. செய்யிய என்னும் வினையெச்சம் குச்சாரியையும் பெற்று வரும்.

உ-ம். கற்கிய—கற்க. (குளா.) அளிக்கிய—அளிக்க. (தணிகை.)
எடுக்கிய—எடுக்க. (சிந்.) வைக்கிய—வைக்க. (சிந் காந்.உசுஅ.)

## செய்யுமென்பதன்கேடு.

உ-ம். தீயுங்—தீங்கனல். (கந். வள். ககூஉ.) தழங்கும்—தழங்குரல்.(கந்.வள்.)
தழுவும்—தழும்பதம். (சிந். பதுமை.) அழியுமே—அழிமே. (காஞ்.சுர)

## அகரக்கேடு.

சுகூ. செய என்னும் வாய்பாட்டிலும், வியங்கோள் முற்றிலும், சில பெயரெச்சத்திலும் இறுதியிலுள்ள அகரம் உயிர் வருமிடத்துக் கெடுதலையும் பெறும்.

உ-ம். போக + ஓடாத=போகோடாத, வருக + என=வருகென.
வாழ்க + என = வாழ்கென, எழுக + ஏன=எழுகென. (சிந்.)
என்ற + இவை = என்றிவை, காண்க+இவன்=காண்கிவன்.
விழுந்த+ இடம் = விழுந்திடம். புக்க + இடம்=புக்கிடம்.(திரு.)

## எழுத்துப்பேறு.

எO. சில பகுதிகள் இடைநிலை முதலியவைகளோடு சேர்ந்து முற்றுகும்போது ய், ர், ழ் என்பவைகளுள் ஏற்பதைப் பெறுதலும் உண்டு.

உ-ம். து—துய்த்தான், கூ—கூயினன்,
எவு—எயினன், ஆ—ஆயினன்,
பகு—பகிர்ந்தான், முதுமை—முதிர்ந்தான்,
உமி—உமிழ்ந்தான், கவி—கவிழ்ந்தான்,

எ௨.௩

## முற்று.

எஉ. சில முற்றுக்கள் இறந்தகாலத் தன்மைவிகுதியின் பின்னும் இடைநிலையின் பின்னும் இசின் என்பதையும், வருங்காலமுற்றுகளில் சில ம என்பது பெற்று வருதலையும் பொருந்தும்.

| | |
|---|---|
| உ - ம். ஆன்றிசின்—அமைந்தேன். (கலி.) | வந்திசின்—வந்தேன். |
| நயந்திசினோர்—நயந்தவர். | கண்டிசின்—கண்டேன். (புறநா.) |
| என்மர். (சிந். கன. உஅ௬.) | காண்மர். (மதுரை.) |

நச்சினார்க்கினியர் "என்பார் என்மரெனத்திரிந்தது" என்பர். என்மனார் மொழிமனார் என்பவையும் "ம" என்பதனோடு அன் சாரியை பெற்றதென்பாரும் பெயர்ப்பகுபதமென்பாருமுளர்.

---

## இடையடி.

| | |
|---|---|
| ஒப்ப — ஒத்தான். | எய்ப்ப — எய்த்த=ஒத்த. (சேந்தில்.) |
| போல— போன்றான். | எற்றெனல்—இரங்கல். |
| மன் — மன்னினான். | பின்—பின்றினான். |

---

## வடசொல்லடி.

| | |
|---|---|
| வஞ்ச்—வஞ்சித்தல். | யாச்—யாசித்தல். |
| பட்—படித்தல். | தட்—தட்டல். |
| தாவ்—தாவல் - ஓடல். | இரை—இரைத்தல். |
| கம்—கமித்தல்-போதல். (இரகுவமி.) | காமம்—காமித்தல். |
| அத்தம்—அத்தமித்தல்-மறைதல். | சலம்—சலித்தல். (இரா. பிர.) |
| சர்—சரித்தல்-போதல். | சன்—சனித்தல். |
| நச்—நசித்தல்-அழித்தல். | அச்—அசித்தல். (சிந்தா.) |

---

# உரிச்சொற்பாகுபாடு.

எங. உரிச்சொற்கள் பெயரோடு புணரும் போதும், வினைச்சொல்லாக்கப் படும்போதும் ஈறுகெடுதல், ஈறுவேறுதல், முதனீளல், குறுகுதல் முதலிய பல விகாரங்களையும் அடையும்.

---

எச. தடவென்னும் உரிச்சொல் பெருமை வளைவு என்னும் இரு பொருளையும் உணர்த்தும்.

உ-ம். பெருமை—"தாடோய்தடக்கை" (புறநா. கச.)
,, "தடவுநிலைப்பலவு" ( ,, ககூ.)
,, "தடந்தோளுக்கிரச்செழியன்" (திருவிளை. வேத. க.)
,, "தடாமணி" (கல்லா. கo.) (சேதுபுரா. காப்பு.)
,, "தடித்ததுமேனியென்னே" (இராமா. சுந். திருவடி. அங.)
,, "தடையினதிரண்டதோள்" (கலித். குறி. கூ.)
,, "தடைஇயமென்றோள்" (நெடுநல்வாடை.)
வளைவு— "தடமருப்பிரண்டுமேற்று" (சிந். மண். ககூஎ.)
,, "தடாயினகுருதிவாள்" (சிந்தா. கனக. கூஉ.)
,, "தடாம்பிறைமருப்புத்திண்கை" சிந். காந். ஙகச.)
,, "தடவுபுதுடுப்பீன்று" (கலித்தொகை. முல். க.)
,, தடுமாற்றம்—நேர்படாமை. "கால்தடுமாறிற்றம்மா" (பார.)
,, "தடவியவுளத்துச்சேக்கா" (தணி. நந். சகூ.)
,, "தடைந்தன" (கல்லாடம் ஙக.)
,, "களிதட்பவந்தவிக்கவின்காண்" (கலி. மருத. க.)
,, "உண்மெகிழ்தட்டமழலைநாவில்" (மதுரைக்காஞ்சி.)
,, "தடித்தவேழத்தின்கோடு" (தணிகை. நாடு. ஙகூ.)
,, "தட்டற்றிவணுறைகின்றவர்தமை" (கந்தபு. அசமு.)
,, "தட்டாமற்செல்லும்" (நாலடி. கயவு. ரு.)
,, "தடைஇயசிலை" (தணி. சீபரி. கூச.)
ஆற்ற—மிக. "ஆற்றவும்பழைய" (திருவி. இக். உச.)
அற — ,, "அறவுமகங்கரித்தனன்" (பாரத. காண்டவத. ருக.)
குட—வளைவு. "குடாவடிக்குருளை" (மலைபடுகடாம்.)

---

## இகரவீறு.

எரு. கடி என்னும் உரிச்சொல் களைந்து விடுதல், மிகுதி, சிறப்பு, விளக்கம், விரைவு, புதுமை, ஐயம், கரிப்பு, காவல், கூர்மை, அச்சம் முதலிய பொருள்களைக் காட்டும்.

உ-ம். களைதல்—"கடிவகடிந்தொரீஇ" (நாலடி. மேல். எ.)
,, "களைகடுந்தொழில்" (கல்லாட. உகூ.)
,, "மைந்நிலங்கடிமடவார்" (சேதுபுரா. நாடு. கூஉ.)
,, "இராவணன்றன்னையுங்கட்டு" (இராமா. மீட். ககஅ.)
,, "கட்பிறேதை" (மதுரைக்காஞ்சி.)
,, "கட்டபினீரினுநன்றதன்காப்பு" (குள். உழ. அ.)
,, "வயற்குவளைகட்பவரிருவரை" (சிந். பதுமை. அச.)

மிகுதி—"கடுஞ்சுரையானுன்கு" (புறப்பொருள் வெண். கஅ.)
,, "கடுங்குலே" (கல்லாட. உகூ.)
,, "கட்டணி" (திருக்கோவையார். ௩0௩.)
,, "கட்டழற்காமத்தீயிற்" (சிந்தா. நாம. உ௨௩.)
,, "கட்டாண்மை" (பாரத. பதினே. கஎ.)
,, "கடுத்தகாட்டும்பளிங்கு" (வள். குறிப். ௬.)
,, "காட்டுக்களேந்து" (ஆசாரக்கோ.) காட்டு—செற்றை.
சிறப்பு—"கட்டழகுடையசெவ்வேற்கருணே" (கந்தபு. வள். கஅஉ.)
,, "கட்டேரைகேட்டனன்யானெனை" (சிலப். பதி.)
விளக்கம்—"கடும்பகல்" "அருங்கடிப்பெருங்காலே" (புறநா.)
விரைவு— "கடிதாகநெடிதோடி" (பாரத. நான். ௩௬.)
,, "கடுக்கியொருவன்கடுங்குறளே" (நால்டி. பெரு. ௬.)
புதுமை—"கடிமணச்சாலே" (கந்தபு. தெய். உ௩௩.)
ஐயம்— "கடுத்தபின்தேற்றுதல்யார்க்குமரிது" (வள். மன்னர். ௩.)
,, "கடாவுருவோடுகண்ணஞ்சாது" (வள். ஒற். ரு.)
கரிப்பு— "கடுஞ்சொல்லன்கண்ணிலனுயின்" (வள். வெரு. ௬.)
காவல்— "மதுவனத்தைக்கட்டழித்திட்டதின்று" (இரா. திருவடி. கஅ.)
கூர்மை— "கட்டழித்தகாவலனீயன்றே" (சிங். பது. அ0.)
அச்சம்— "அருங்கடிவேலன்முருகொடுவளேஇ" (மதுரை.)

---

எ௬ நளி என்பது பெருமை, செறிவு என்னும் பொருள்களைத் தரும்.

உ-ம். பெருமை "நளிநீர்ப்படப்பை" (பெரும்பாணுற்.)
செறிவு "நள்ளிருளிடையேசென்று" (கந்தபு. வள்.)
,, "நளிந்துபலர்வழங்கா" (மலேபடுகடாம்.)
,, "நன்மரனளியநறுந்தண்சாரல்" (புறநா.)
,, "நட்டார்செயின்" (வள். பழமை.)
,, "உறினட்டறிஞருமம்" (வள். ஓ.)
,, "நட்கப்பெறின்" (நால்டி. நல். ௪.)
,, "நள்ளார்வணங்குநளனென்னும்" (நைடத.)

---

## உகர வீறு.

எஎ. பொற்பு என்பது பொலிவு என்னும் பொருளேயும், பழுது என்பது பிரயோசனமின்மை என்னும் பொருளேயும், வம்பு என்பது நிலேயின்மை என்னும் பொருளேயும், வறிது என்பது அற்பம் என்னும் பொருளேயும் உணர்த்தும்.

உ-ம். பொற்பு—"பொற்பாட்டெழீஇப்போகு" (தணிகை. நகர.)
"பொற்றதோர்பவளந்தன்மேற்புனை" (சிந். மண். கசசு.)
,, "பொன்றநாணி" (பாரத. சம். கூரு.)
,, "பொற்றொடி" (சிலப்பதி. அரும்பத.)
,, "பொல்லாக்கனுக்கண்டார்" (சிந். மண். எஉ.)
,,
பழுது— "பழுதுபட்டதிக்குருகுலம்,, (பாரத. சம்பவ.)
"யானிலாப்பாழ்படுதிசையினை,, (நைடத. அன்.)
,, "வளமனைபாழாகவாரி,, (புறப்பொருள்வெண். வஞ்.)
,, "நெஞ்சுபாழ்பட்டானை,, (இராமா. ஊர்தே. உசo.)
,,
வம்பு— "வானவர்புகாரென்கைவம்பே,, ( ,, உரு.)
"வம்பமள்ளரோபலரே,, (புறநா.)
,,
வறிது— "வறிதேநகைசெய்தாள்,, (வாணன் கோவை.)

---

எஅ. கெழு என்பது நிறத்தையும், கவவு என்பது அகத்திடுத லையும், தெவு என்பது கவர்தலையும் உணர்த்தும்.

உ-ம். கெழு—"செங்கேழடுத்தசினவடிவேலே,, (கந்தரலங்.)
கவவு—"களிற்றுரிகவைஇயகாட்சிபோல்,, (கந்தபு. ஆற்.)
தெவு—"சிலையலங்கணிச்சிதெவ்வி,, (தணிகைப்புரா.)

---

எகூ. ஏ என்பது உயர்ச்சியை உணர்த்தும்.

உ-ம். "ஏத்தருமயிற்குழாம்,, (சிந். நாம. ருஅ.)
"ஏக்கழுத்தம்,,—தலையெடுப்பு. (சிந். காந். ச.)
"எக்கியகதிரவற்கஞ்சியேமுற,, (இராமா. கிட். பில. உஎ.)
"திரைக்கடலெக்கர்செய்ய,, எக்கர்—மணற்குன்று. (திருவி.வேல்.கஅ.)
"ஏக்கற்றுங்கற்றார்,, (வள். கல்வி. ரு.) ஏக்கு—உயர்ச்சி.
"வானம்பார்க்குமேக்கழுத்துடைமையால்,, (சேதுபு. வேதா. ருஉ.)
"ஏக்கறுமிந்தவிடுக்கணொழித்தே,, (சேதுபு. மங். ௱க.)

---

## ஐகாரவீறு.

அ0 வெம்மை என்பது விரும்புதலையும், பருமை என்பது பருத்தலையும், செழுமை என்பது வளம், கொழுப்பு, என்பவைகளையும், எய்யாமை அறியாமையையும் உணர்த்தும்.

உ-ம். வெம்மை—"கொம்மைவெம்முலை,, (தனிகைப்பு.)
"வெய்யவெந்நுனைப்பகழி,, (சிர். கோவிந். உ)
பருமை— "பராரைமராத்தருள்பூந்திண்டார்" (திருமுரு.)
செழுமை— "செழுந்துபடச்செங்கெனிறைத்' (சிந். இலக். ...)
எய்யாமை— "எய்யாந்தவறுடையார்க்கருள்,, (தனிகைப்பு.)

சேனாவரையர் "அறிதற்பொருட்டாய் எய்தலென்றானும் எய்த்தலென்றானும் சான்றோர்செய்யுட்கண் வாராமையின்; எய்யாமை எதிர்மறையென்றறிக,, என்றார். அறிதற்பொருட்டாய் அதற்கு விதிவினையுஞ் சில செய்யுள்களில் வருகின்றது.

உ-ம். எய்த்தல் "நொந்தவென்றெய்த்தடிச்சிலம்பிரங்கும்,, (சிந்.முத்.அடு.)
" "உரனையெய்ப்பவர்போன்றுள்ளார்,, (தனி. புரா. ஊ.)

---

இன்னும் பேண் என்பதினின்று "பெட்டக்கது,, (வள். அதி. எடு.) எனவும், கறுப்பு என்பதினின்று "கஃறெனல்,, எனவும். துறுதல் என்பதினின்று துறு எனவும், நம்பு என்பதினின்று நம்பி எனவும் வருதலையும், பிறவற்றையுங் கண்டுகொள்க.

---

## பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| கஎ. | கடு. | அளத்தல். | அளத்தலின்மை. |
| ,, | ... | அளத்தலின்மை | அளத்தல். |
| கூஉ. | உசு. | முழங்கால். | முடங்குதலுடையது |

---

24579
... பல்கலைக்கழக நூல...
31 அக் 1963

# நியாயப்பிரயோகம்.

[..]ம். [..]மீமாஞ்சையிலே ஆயிரம் நியாயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளுள்ளே சிலபல தமிழ்மொழி உரையாசிரியர்களா[லும்] [வட]மொழி யுரையாசிரியர்களாலும் ஆங்காங்குப் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன. அகப்பட்ட சில இங்கே எழுதப்படுகின்றன.

க. அந்தகோலாங்கூலநியாயம். (விசாரசாகரம்.)
உ. அசகசாந்தரநியாயம். (சிவஞான.)
ங. அவ்வளவிலவன்மகிழ்களென்னும்நியாயம். (சிவஞானபோதம்.)
ச. ஆபாலகோபாலப்பிரசித்தநியாயம். (சித்தியுரை.)
ரு. ஆலிகசம்புகதரிசனநியாயம். (சங்கற்ப.)
சு. உபாந்தியநியாயம். (போசசம்பு வியாக்கி.)
எ. கதம்பமுகுளநியாயம். (சித்தியுரை.)
அ. கபோதகநியாயம். (பூவாளூர்.)
கூ. காகாக்ஷிநியாயம். (இலிங்க.)
க0. காகதாலீயநியாயம். (வெங்கைக்கோவை.)
கக. குளாசிகுவைநியாயம். (விசா.)
கஉ. கைமுதிகநியாயம். (பாரதசம்பு.)
கங. கோபலிவர்த்தநியாயம். (வான்மீகம்.)
கச. சமுத்திரகலசநியாயம். (சிவஞானபோதம்.)
கரு. சியாலசாரமேயநியாயம். (விசாரசாகரம்.)
கசு. சுந்தோபசுந்தநியாயம். (சித்தியுரை.)
கஎ. சுபகாபிக்குகநியாயம். (சங்கற்ப.)
கஅ. சூசிகடாகநியாயம். (போசசம்பு.)
ககூ. தண்டாபூபிகநியாயம். (குவலயா.)
உ0. தாலவீசநியாயம். (சிவப்பிரகாசம்.)
உக. தாம்பூலாங்கநியாயம். (சங்கற்ப.)
உஉ. திரமிடவாந்திரகிலாவமநியாயம். (சித்தியுரை.)
உங. தூணாநிகநநநியாயம். (சங்கற்ப.)
உச. தூலாருந்ததிநியாயம். (சிவஞானபோதம்.)
உரு. பிக்குகபாதப்பிரசாரணநியாயம். (மாகவியா.)
உசு. பிட்டபேஷணநியாயம். (மாகவியாக்.)
உஎ. [..]ய்வாகடநியாயம். (பராசரமாதவீயம்.)
உஅ. லோகவேதாதிகரணநியாயம். (சிவஞானபோதம்.)
உகூ. வரகோட்டிநியாயம். (சித்தியார்.)
ங0. விருத்தகுமாரிவரநியாயம். (இரகுவமி வியாக்.)
ஙக. வீசவிருக்ஷநியாயம். (சித்தியுரை.)
ஙஉ. வீசிதரங்கநியாயம். (சித்தியார்.)